


# சித்திர ராமாயணம்

பி. ஸ்ரீ.

## 111. ஒரே மகிழ்ச்சி - வெறி தான்

குழந்தையைப் பெற்ற உவகை தாயைத் தான் பட்ட பிரசவ வேதனைகளையெல்லாம் மறக்கச் செய்து விடுகிறது என்பது பிரசித்தம். 'இந்தக் குழந்தைக்காக மரண வாசல் வரைக்கும் போய் வந்ததும் சரிதான்!' என்று எண்ணி விடுகிறாள். இந்த உவகையில் தந்தைக்கும் பங்கு உண்டு.

இந்த உவகையினும் அதிக உவகை ஏற்படுகிறதாம் பெற்றோருக்கு, பிள்ளை சான்றோன் என்ற பேர் பெறும் போது:

ஈன்ற பொழுதிற்
 பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட
 தாய்

[ ஈன்ற பொழுதில் - பெற்ற நாளினும். பெரிது - அதிகமாக. ] என்று திருவள்ளுவர் கூறுவது பொதுவாக அறிவுள்ள பெற்றோர்களுக்கெல்லாம் பொதுவான மனநிலை என்றே கருதலாம்.

### 'பெரியதோர் உவகையன்'

இனி இந்தக் குறளை நினைவில் வைத்துக் கொண்டு, தசரதன் அடைந்த உவகையைப் பார்க்கலாம். வசிஷ்டரது புகழுரையைக் கேட்டதும், அந்தப் பெரியதோர் உவகை எப்படி அலை யலையாகப் பொங்கி வருகிறது, பாருங்கள்:

மற்(று)அவன் சொன்ன
 வாசகம் கேட்டலும்,
 மகனைப்
பெற்ற அன்றினும்,
 பிள்ளைகள் பிடிக்கும்அப்
 பெருவில்

இற்ற அன்றினும்,
எறிமழு வாளவன்
இழுக்கம்
உற்ற அன்றினும்,
பெரியதோர் உவகையன்
ஆனன்.

[ அன்றினும் – அந்த நாளினும். பிஞ்ஞகன் – சிவன். இற்ற – ஒடிந்த. எறி மழு வாளவன் – எறிகின்ற பாசு என்ற ஆயுதந்தாங்கிய பாசுராமன். இழுக்கம் – தோல்வி. ]

மகனைப் பெற்ற நாளினும் பெரிதான உவகையை ஏற்கெனவே அடைந்து விட்டானும் தசரதன். அதாவது, சிவதனுசை ராமன் முறித்த தாகக் கேள்விப்பட்ட அந்தக் காலத்திலேயே. பரசுராம கர்வபங்க காலத்திலோ சிவதனுசு முறிந்த உவகையினும் அதிக உவகை ஏற்பட்டு விட்டதாம். எனவே, அந்தப் பரசுராமன் தோல்வியுற்ற அந்த நாளினும் பெரியதோர் உவகையன் ஆனன் இப்போது என்பது கம்ப சித்திரம்.

## அறத்தின் கொடுமை

இந்த உவகையைத் தசரதனது கண்களில் அரும்பிய ஆனந்த பாஷ்பமே வசிஷ்டருக்கும் மந்திரி சபைக்கும் அறிவித்து விட்டது. சக்ரவர்த்தி மகரிஷியின் அடிகளில் வணங்கித் தன் நன்றியைத் தெரிவித்துக் கொண்ட பின், மந்திரிமார் கருத்தைச் சுமந்திரன் கூறத் தொடங்குகிறான். அக் கருத்தை அந்த மந்திரிகளின் முகங்களே 'எழுதி நீட்டிய இங்கிதம்' போலத் தெரிவித்து விட்டனவாம்.



சுமந்திரன் அந்த முகக்குறிப்பிலே குளிர்ந்தஉவகையையும் சுடுகின்ற துன்பத்தையும்ஒருங்கே கண்ணுற்றான். எனினும், 'தர்மத்தை மறப்பது முறையன்று; ராமனுக்கு முடிசூட்டித் தசரதன் துறப்பதே நியாயம்' என்ற மந்திரிமார்களின் குறிப்பை வெளிப்படுத்துகிறான். வெளியிட்டுத் தன் ஹிருதய தாபத்தையும்,

அறத்தின் ஊங்(கு)இனிக்
கொடியதெனல் ஆவதொன்று
யாதோ?

[அறத்தின் – அறத்தைக் காட்டிலும். ஊங்கு - மிகுதியாக.]

என்று அப்படியே திறந்து காட்டி விடுகிறான்.

"கொடுமை, கொடுமை என்று எதையெல்லாமோ சொல்கிறார்களே, அறத்தைக் காட்டிலும் கொடிய பொருளும் இருக்க முடியுமோ?" என்ற சுமந்திரன் வார்த்தையில் தசரதனுக்கு மந்திரியும்

நண்பனுமாக இருப்பவனுடைய உள்ளம் எப்படித் துடிக்கிறது பாருங்கள்! சக்ரவர்த்தி சுமந்திரனை நோக்கி,

'சென்று கொண்டணை
திருமகள் கொழுநனை'
என்றான்.

[அணை - வந்து சேர்வாய். திருமகள் கொழுநன் - சீதாலக்ஷ்மியின் கணவனான ராமன்.]

## சீதாராமன் சிங்காசனத்தில்!

மகனைப்பெற்ற உவகையினும், சிவதனுசை முறித்து மருமகளைப் பெற்ற உவகை தசரதனுக்கு அதிகம். இது முன்னரே குறிக்கப்பட்டது. எனவே, பட்டாபிஷேகச் செய்தி தெரிவிக்க 'ராமனை அழைத்து வா' என்று சொல்லும்போதும், 'சீதாராமனை அழைத்து வா' என்ற சொல்லத் தோன்றுகிறது தசரதனுக்கு. சீதையையும் ராமனையும் பிரித்துப் பேசவே சக்ரவர்த்தி யுள்ளம் இங்கே இடந் தரவில்லை. 'இருவரும் சேர்ந்து சிங்காசனத்தை அழகு செய்ய வேண்டும்; தேசக் காவல் புரிய வேண்டும்' என்ற இந்தக் குறிப்பு, பின்னால் 'இருவரும் சேர்ந்து வனம் போவார்கள்' என்பதற்கும் ஒரு சூசகம் போலிருக்கிறது.

சுமந்திரனுடைய மகிழ்ச்சியைத் தான் என்னென்பது? தசரதனுடைய மனம் ஒத்த அன்பனல்லவா?



ராஜ்யம் ராமனுக்குக் கிடைப்பதாகச் சுமந்திரன் நினைக்கவில்லை. ராஜ்யம் முழுமையும் தனக்கே கிடைப்பதுபோல் உள்ளக் கிளர்ச்சி அடைகிறான். தனக்கு மனமொத்த நண்பனாக இருந்த தசரதன் ஆட்சியிலும்கூட இத்தகைய உள்ளக் கிளர்ச்சி ஏற்படவில்லையாம்.

அலங்கல் மன்னனை
அடிதொழு(து), அவன்மனம்
அனையான்,
விலங்கல் மாளிகை
வீதியின் விரைவொடு
சென்றான் ;
தலங்கள் யாவையும்
பெற்றனன் தான்எனத்
தளிர்ப்பான்.
பொலன்கொள் தேரொடும்
இராகவன் திருமனை
புக்கான்.

[ அலங்கல் - பூமாலை. அனையான் - ஒத்தவன். விலங்கல் - மலை (போன்ற). தலங்கள் – ராஜ்யம். பொலன் கொள் - பொன் மயமான.]

இந்தப் பாட்டின் ஓசை நயம் நன்கு உணர்ந்து கொள்ளத் தக்கது. மலை போன்ற மாளிகைகளை இருபுறத்தும் உடைய ராஜவீதியிலே தேருருளைகள் உருண்டோடுவதும், அந்தத் தேருக்கும் முன்னே சுமந்திரன் உள்ளம் உருண்டோடுவதும் பிரத்தியட்சமாகி விடுகின்றன.

ராமனைப் பார்க்கப் போன சுமந்திரன் அந்த மாளிகையில் ராமனை மட்டும் பார்க்கவில்லை. தசரதன் சொன்னபடியே சீதாராமனைப் பார்த்து விடுகிறான். ஏன், சீதையோடும் ராமனோடும் லக்ஷ்மணனையும் அங்கே பார்க்கிறான். மனைவியோடும் தம்பியோடும் ராமன் வீற்றிருக்கும் காட்சி சுமந்திரன் கண்களையும் கருத்தையும் வெறி கொள்ளச் செய்துவிடுகிறது.

பெண்ணின் இன்னமு(து)
அன்னவள் தன்னொடும்,
பிரியா
வண்ண வெஞ்சிலைக்
குரிசிலும், மருங்கினி(து)
இருப்ப,
அண்ணல் ஆண்டிருந்
தான்,அழ(கு) அருநற(வு)
என்னலக்,
கண்ணும் உள்ளமும்
வண்டெனக் களிப்புறக்
கண்டான்.

[வண்ண வெஞ்சிலை – அழகிய உக்கிரமான வில். குரிசில் – (இங்கே) லக்ஷ்மணன். மருங்கு – பக்கத்தில்; அரு நறவு – அருமையான தேன்.]

தேவாமிர்தமே பெண்ணுருவம் பெற்று வீற்றிருப்பது போலச் சீதை ராமனுடன் வீற்றிருக்கிறாள். லக்ஷ்மணனோ வில்லும் கையுமாக அண்ணன் பக்கம் உத்ஸாகமாயிருக்கிறான். இந்தச் சேர்த்தியழகைக்கண்ட சுமந்திரன் கண்ணும் உள்ளமும் தேன்குடித்த வண்டு பட்ட பாடு படுகின்றனவாம். இப்படித் தனிமையில் அனுபவித்த சேர்த்தியழகைச் சுமந்திரன் சிங்காதனத்திலும் கண்டு களிக்கவேண்டுமென்றும், தன்னைப்போல் பிறரும் அனுபவிக்க வேண்டுமென்றும் விரும்புவது இயல்பே. அதற்கு என்ன தடை இருக்க முடியும் ?

சக்ரவர்த்தியும் வசிஷ்டரும் மந்திரிமார்களும் ஒரு மனப்பட்டிருக்கிறார்கள். ஜனங்களுக்கு ராமன் மீதுள்ள அன்பிற்கும் ஆசைக்குமோ கரைகாணயில்லை. எனினும் சுமந்திரனது ஆசை அவ்வளவு விரைவில் கைகூடுவதாக இல்லையே !




## பி. ஸ்ரீ.

### 112. மைந்தனும் தந்தையும்

சுமந்திரன் ராமனைக் கைதொழுது, "ஐயனே! சக்ரவர்த்தி அழைத்து வரும்படி நியமித்தார்; ஒரு காரியம் உண்டு" என்று அந்தக் கட்டளையைத் தெரிவித்ததும், ராமன் பொருக்கென எழுந்து சுமந்திரன் தேரில் ஏறிச் சென்றான். அந்த நிகழ்ச்சியை இதிகாசப் போக்கிற்கு இசையக் கம்பன் பின்வருமாறு சித்தரிக்கிறான் :

முறையின் மொய்ம்முகில்
ஏனமுர(சு) ஆர்த்திட,
மடவார்
இறைக முன்றசங்(கு)
ஆர்த்திட, இமையவர்
எங்கள்
குறைமு டிந்ததென்(று)
ஆர்த்திடக், குஞ்சியைச்
சூழ்ந்த
நறைஅ லங்கல்வண்(டு)
ஆர்த்திடத், தேர்மிசை
நடந்தான்.

[முறையின் - முறையாக. மொய்ம்முகில் - செறிந்த மேக கர்ஜனையாகிய இடி. ஆர்த்திட - ஆரவாரிக்க. மடவார் - பெண்கள். இறை கழன்ற - முன்னங் கையை விட்டுக் கழன்ற. சங்கு - (இங்கே) சங்கு வளை. இமையவர் - தேவர்கள். குஞ்சி - தலைமுடி. நறை அலங்கல் - தேன் கசியும் பூமாலை. நடந்தான் - சவாரி போனான்.]

#### ராமாயணம் ஆரம்பமாகி விட்டது!

ராமன் தேரில் போகும்போது அந்த வருகையைக் குறிக்க முரசுகளை அங்கங்கே முறையாக முழக்குகிறார்கள். அவனது அழகில் ஈடுபட்ட பெண்கள் வளை கழன்று விழுவதும் தெரியாமல் அவ்வளவு மெய்ம்மறதி

யாகப் பார்த்துக் கொண்டிருக்கிறார்களாம். வான வீதியில் தேவர்களோ 'எங்கள் குறை முடிந்தது, ராவணன் ஆயுளும் முடிந்தது; ஆம், ராமாயணம் ஆரம்பமாகி விட்டது!' என்ற தூரதிருஷ்டியோடு சந்தோஷ ஆரவாரஞ் செய்கிறார்களாம். ராமன் முடியில் சூடியிருந்த மாலையைச் சுற்றி வண்டுகளும் ரீங்கார பாஷையில் ஏதோ முழக்குகின்றனவாம். இத்தனை முழக்கங்களுக்கிடையே ராமன் புறப்படுகிறான்.

முரசுகளின் இடிகளோடு வளைகள் கழன்று விழும் சத்தத்தையும், தேவர்களின் கோஷத்தோடு வண்டுகளின் ரீங்காரத்தையும் இசைத்துக் கூறும் நயம் கவனிக்கத் தக்கது. இவையெல்லாம் மங்கள முழக்கம்தானே?

ராமன் வீதியில் செல்லும்போது பெண்களின் அறிவுவெள்ளம் அடக்கமாகிய அணையையும் கடந்து பெருகுகிறதாம்: அவ்வளவு ஈடுபாடு.

சாள ரத்தினும்
பூத்தன தாமரை
மலர்கள்

என்று சொல்லும்படி, வீதியின் இருபுறத்திலுமுள்ள வீட்டுப் பலகணிகளில் எல்லாம் கண்களும் முகங்களுமாகவே மொய்த்திருக்கின்றன.



## காதலும் கடமையும்

ராமன் குருவாகிய வசிஷ்டரை முதலில் வணங்கித் தந்தையின் பாதங்களில் பணிகிறான். பணிந்த அளவில், சக்ரவர்த்தியின் மன நிலையையும் செய்கையையும் இதோ பாருங்கள்:

காதல் பொங்கிடக்
கண்பனி உகுத்திடக்,
கனிவாய்ச்
சீதை கொண்கனைத்
திருவுறை மார்பகம்
சேர்த்தான்.

[கண்பனி – ஆனந்தக் கண்ணீர். உகுத்திட - சிந்த. சீதை கொண்கன் – சீதையின் நாயகனான ராமன். திரு உறை – (இங்கே) ராஜ்ய லக்ஷ்மி வசிக்கிற.]

இங்கும் ராமனைச் சீதாராமன் என்று குறிப்பிடுவது கவனிக்கத் தக்கது. தன் மார்பகத்திலுள்ள திருவை (ராஜ்ய ஸ்ரீயை) மைந்



தன் மார்பகத்திலே சேர்த்து விடுவது போலத் தழுவிக்கொண்டு, தந்தை அந்தக் கனி போன்ற வாயைப் பார்த்தான், ஆனந்தக் கண்ணீர் திரையிட்ட கண்களால்.

தந்தை மைந்தனைத் தழுவிக்கொண்ட அந்த நிகழ்ச்சிதான், இன்னும் எவ்வளவு ரஸமாகவும் பொருத்தமாகவும் கற்பனைத் திறனுடனும் வர்ணிக்கப் பெறுகிறது :

நலங்கொள் மைந்தனைத்
    தழுவினன் என்பதென் ?
        நளிநீர்
நிலங்கள் தாங்குறும்
    நிலையினை நிலையிட
        நினைந்தான் :
விலங்கல் அன்னதின்
    தோளையும் மெய்த்திரு
        இருக்கும்
அலங்கல் மார்பையும்
    தனதுதோள் மார்புகொண்(டு)
        அளந்தான்.

[ நளி நீர் - கடல். நிலங்கள் — ராஜ்யம். தாங்குறும் - தாங்குதற்கு உரிய. நிலையிட — அளவிட்டறிய. விலங்கல் அன்ன — மலையொத்த.

திண் — வலிமை பொருந்திய. மெய்த் திரு — உண்மையாகிய திருமகள்.]

"இந்த ராஜ்ய பாரத்தைத் தாங்குவானு? இளைஞுயிருக்கிறனே" என்று சோதித்துப் பார்ப்பது போலத் தழுவிக் கொண்டானும். இந்த இளைஞனது தோளின் திண்மையையும் மார்பின் பரப்பையும் தன் தோள் மார்புகளால் அளந்து பார்த்துச் சோதிப்பதற்காகவே, ராமனைத் தசரதன் தழுவிக் கொண்டான் போலும் — என்கிறுன் கவி.

பிள்ளை மீதுள்ள பேரபிமானத்தையும், ராமன் இப்போது அடைந்திருக்கும் வளர்ச்சியையும் ஒருங்கே ரஸமாக வெளியிடுவது இச் செய்யுள். தசரதன் பூரிப்புடன் கவிஞன் பூரிப்பையும்— ஏன், கவிதா தேவியின்பூரிப்பையுமே-நாம் ஒருங்கு நோக்குவது போலத் தோன்றுகிறது.

ராமனைப் பக்கத்தில் இருத்திக் காரியத்தைத் தெரிவிக்கிறுன் தசரதன். 'பரசுராம கர்வ பங்கம் செய்த தோள்களையுடையவனே!' என்று க்ஷத்திரிய கர்வம் தோன்ற அருமையாக அழைத்து, 'முடிசூடி நல்லறம் தாங்க வேண்டும்' என்று வேண்டிக்கொள்கிறுன். ராமனுக்கோ கிரீடத்தின் மீது காதல் இல்லை; எனினும் அரசுச் செல்வத்தை இகழவும் இல்லை, 'இது நமது கடமை' என்று பொறுப்பை ஏற்றுக் கொள்கிறுன். பிறகு தசரதன் திருப்தியுடன் தன் அரண்மனைக்குப் போக, ராமனும் தன் அரண்மனைக்குப் போகிறுன்.




பி. ஸ்ரீ.

## 113. 'நாம் எல்லாரும் இந்நாட்டு மன்னர்!'

"ராமபட்டாபிஷேகம் நடைபெறுமென்று பல நாட்டு மன்னர்களுக்கும் அழைப்புப் பத்திரிகை அனுப்பினான் தசரதன். அது முத்திரையிட்ட கடிதம் என்று தெரிவிக்கிறான் கவிஞன். அது கருட முத்திரை என்பது கம்பன் கற்பனை.

பிறகு சக்ரவர்த்தி பட்டாபிஷேகத்துக்கு வேண்டிய ஏற்பாடுகளைக் கிரமப்படி செய்வதற்கு வசிஷ்டரை அனுப்பி வைத்தான். அப்பால், சிற்றரசர்களை — மந்திராலோசனை நடைபெறும்போது வெளியேறி யிருந்த அந்த அரசர்களை — மண்டபத்திற்கு வரவழைத்து மந்திராலோசனையின் முடிவைத் தெரிவித்தான்.

### மூழ்கினார்களா? பறக்கிறார்களா?

செய்தி கேட்டார்களோ இல்லையோ, ஒரே குதூகல வெறிதான் அந்தச் சிற்றரசர்களுக் கெல்லாம். அந்த மதுவை அப்படிப் பானம் பண்ணினார்கள் என்றால் போதாது; அதில் முங்கி முழுகிப் போனார்கள்:

இறைவன் சொல்எனும்
இன் நற(வு) அருந்தினர்
யாரும்
முறையில் நின்றிலர்,
முகந்துறு களியிடை
மூழ்கி,
நிறையும் நெஞ்சிடை
உவகைபோய் மயிர்வழி
நிமிர,
உறையும் விண்ணகம்
உடலொடும் எய்தினர்
ஒத்தார்.

[ இறைவன் — சக்ரவர்த்தி. இன் நறவு — இனிய மது. முகந்துற — அள்ளிக் கொள்ளும். களி — களிப்பு. உறையும் — தங்கும். ]

அந்த வெறியில் சக்ரவர்த்தி என்ற மரியாதை கூடப் பார்க்காமல் முறை தவறி நடந்து கொண்டார்களாம் சிற்றரசர்கள்.

அந்த உவகை — வெறி உள்ளடங்காது பொங்கி மயிர்க் கூச்செறிய கூட்டோடு சொர்க்க லோகத்திற்கே பறந்து போனவர்களைப் போல் ஆகி விட்டார்களாம்.

## சிற்றரசர்களா? சக்ரவர்த்திகளா?

இவர்கள், 'ராஜ்யம் ராமனுக்குக் கிடைக்கப் போகிறது' என்று கூட ஆனந்திக்கவில்லையாம்; தங்களுக்கே சக்ரவர்த்தி — ஸ்தானம் கிடைத்து விட்டது என்றே மகிழ்ந்து போகிறார்களாம் :

**ஒத்த சிந்தையர்,**
**உவகையின் ஒருவரின்**
**ஒருவர்**
**தத்த மக்(கு)உற்ற**
**அரசெனத் தழைக்கின்ற**
**மனத்தர்!**

[ ஒருவரின் — ஒருவரைக் காட்டிலும். ]

இந்நிலை,

**தலங்கள் யாவையும்**
**பெற்றனன் தான்!-எனத்**
**தளிர்ப்பான்**

என்று ஏற்கெனவே வருணிக்கப் பெற்ற சுமந்திரனுடைய மன நிலையை ஞாபகப் படுத்துகிறது.

## சிற்றரசர் உள்ளம்

இத்தகைய மன நிலையோடு கூடிய சிற்றரசர்கள் சக்ரவர்த்தியை நோக்கி ராமனுக்கு மகுடாபிஷேகம் செய்வது தக்கதே என்று கூறும் போது, 'பரசுராமன் வீரத்தைக் கெடுத்த மகா வீரனுக்கு இந்த ராஜ்யம் உரியது தான்' என்று ஆமோதிக்கிறார்கள் — சக்ரவர்த்தியைப் போலவே தங்கள் க்ஷத்திரிய கர்வம் தோன்ற. அந்தப் பரசுராம கர்வபங்கத்தை ராமன் பெருமையாகவும், தங்கள் பெருமையாகவும் அடிக்கடி நினைத்துப் பார்க்கிறவர்கள் இந்த அரசர்கள் என்பது குறிப்பு. இத்தகைய அரசர்களை 'வேறிலா மன்னர்' (சக்ரவர்த்தியோடு வேறுபாடு இல்லாத அரசர்) என்கிறான் கவிஞன்.

இந்த நிலையில் சக்ரவர்த்தி பெரு மகிழ்ச்சி அடைந்தும் அதை உள்ளுக்குள்ளே அடக்கிக்கொண்டு, அவர்களுடைய உள்ளத்தை இன்னும் உள்ளபடி சோதித்து உணர வேண்டும் என்று தந்திரமாக ஒரு கேள்வி போடுகிறான். "அரசர்களே! நான் புதல்வனிடமுள்ள அன்பினால் மயங்கி, நாடாளும் வல்லமை உடையவன் அவன் என்று எண்ணி

யிருக்கிறேன். இக் கருத்து தக்கதோ என்று எனக்குத் தெரியாது. நீங்கள் நடுநிலையாக மனமுவந்து ஒரே மனமாக என் அபிப்பிராயத்தை ஒப்புக் கொள்கிறீர்களா? அன்றி முகஸ்துதியாகச் சொன்ன சொல் தானா? எதனால் நீங்கள் ராமன் அரசாளத் தகுந்தவன் என்கிறீர்கள்?" என்று வினவுகிறான் தசரதன்.

## பதில் -- கேள்வி

அந்த வினவுக்கு அவர்கள் வேறொரு வினவினால் பதில் சொல்லுகிறார்கள்:

ஊருணி நிறையவும்,
உதவும் மாடுயர்
பார்கெழு பயன்மரம்
பழுத்தற் றாகவும்,
கார்மழை பொழியவும்,
கழனி பாய்நதி
வார்புனல் பெருகவும்,
மறுக்கின் றார்கள் யார்?

[ஊருணி — குளம், ஏரி. மாடு — பக்கத்திலே. பார் — (இங்கே) ஊர். கெழு — பொருந்திய. பயன் மரம் — பயன்படும் மரம். பழுத்தற்று — பழுத்தது. கார் — மேகம். கழனி — வயல். வார்புனல் — இடையறாத நீர்ப் பெருக்கு.]

ஊருணி நிறைந்திருப்பதை ஊரார் வேண்டாம் என்று மறுப்பார்களா? அதிலும் அந்த ஊருக்கு அந்த ஊருணியைத் தவிர வேறு குடி தண்ணீர் - வசதி இல்லாமல் இருக்கும்போது? ஊருக்குப் பக்கத்திலே நல்ல கனிதரும்மரம் பழுத்தால் அதைத் தான் வேண்டாம், வேண்டாம் என்பார்களா?



## கூனலுள்ளமும் நேர்மையுள்ளமும்

மேகம் பருவமழை பொழிவதையும், வயல்களுக்கு நீர் பாய்ச்சும் நதி ஜீவ நதியாகப் பெருகிக்கொண்டிருப்பதையும் வேண்டாம் என்று தடுக்கிறவர்கள் தாம் உண்டா? அப்படியே ராம பட்டாபிஷேகமும் இயற்கை—அன்னையின் வரப்பிரசாதம் போன்றது. ஆகவே இதை மறுக்கும் உள்ளமும் இருக்க முடியுமா? இவ்விதமாய்ப் பேசுகிறார்கள் சிற்றரசர்கள். இதை மறுக்கும் கோணல் உள்ளமும் (அதாவது கூனியுள்ளமும்) சக்ரவர்த்திக்குப் பக்கத்திலேயே உண்டு என்பதை இவர்கள் எப்படி அறிவார்கள்?

மேலும் இவர்கள் ராமனிடத்தில் ஜனங்கள் பேரன்பு காட்டுவதின் காரணத்தையும் தெளிவு படுத்துகிறார்கள். ராமன் அவர்களிடம் உண்மையான பேரன்பு காட்டி வருவதால், அத்தன்மையான பேரன்பை உயிர்க்குலமும் ராமனிடம் காட்டி வருகிறது — என்ற அந்த இயற்கை—இரகசியத்தையும் வெளியிடுகிறார்கள்.

## ஆனந்தக் கண்ணீர்

அரசர்களின் சொல்லைக்கேட்ட சக்ரவர்த்தியின் மகிழ்ச்சியைத் தான் என்னென்பது?


மொழிந்தது கேட்டலும்,
மொய்த்து நெஞ்சினைப்
பொழிந்த பேருவகையிற்
பொங்கு காதலன்
கழிந்தநோர் இடரினன்,
களிக்கும் சிந்தையான்
வழிந்தகண் ணீரினன்,
மன்னன் கூறுவான்.

இத்தகைய மகிழ்ச்சி எப்பேர்ப்பட்ட வார்த்தையாக வெளிப்பட்டிருக்க வேண்டும்? சிற்றரசர்களை நோக்கிச் சக்ரவர்த்தி, "என் மகன் என்றுதான் ராமனைச் சொல்வானேன்? இவன் உங்களுடைய புதல்வன்; அடைக்கலமாகப் பார்த்துக் கொள்ளுங்கள்" என்கிறான்.

*   *   *

'நாம் எல்லாரும் இந்நாட்டு மன்னர்' என்ற ஆனந்தம் தாண்டவமாடும் பிரதேசத்திலே, சக்ரவர்த்தியும் சிற்றரசர்களும் இப்படியெல்லாம் நடந்து கொள்வதில் தான் என்ன அதிசயம் இருக்க முடியும்?

# சித்திர ராமாயணம்



பி. ஸ்ரீ.

## 114. ஒரு கொண்டாட்டம்

தசரதனும் மந்திரிகளும் செய்த மந்திராலோசனை இனிது நிறைவேறியது. 'ஏதாவது இடையூறு எப்படியோ நேர்ந்து விடலாகாதே!' என்பதற்காகப் பட்டாபிஷேகச் செய்தி ரகஸ்யமா யிருக்க வேண்டும் என்பது சக்ரவர்த்தியின் விருப்பம், சக்ரவர்த்தியின் குறிப்பான ஆணை.

### ரகசியமும் பரசியமும்

எனினும் அதற்குச் சிறகு முளைத்து விடுகிறது. 'எப்படி?' என்ற ஆராய்ச்சி தேவை யில்லை. ஒரு மதி மந்திரி தன் காதலி காதில் மாத்திரம் ஓதியிருக்கலாம். 'ஊதி விடாதே, பரம ரகஸ்யம். ஹிருதயத்தில் பூட்டி வைத்துக் கொள்' என்று மன்றாடியும் இருக்கலாம். அது போதுமல்லவா ரகஸ்யம் பறந்து போவதற்கு? தனக்கு மட்டும் நாயகன் சொன்னதை அந்த அம்மாள் தோழிக்கு மட்டும் சொல்லாமல் இருக்க முடியுமா? சொல்லா விட்டால் ஹிருதயம் வெடித்துப் போகுமே! அறிவு, உணர்ச்சியுடன் போராடித்தான் பார்க்கிறது: தோல்வி அறிவுக்குத்தான்! 'உன் காதிலே தான் போட்டு வைக்கிறேன் : பத்திரம், ஜாக்கிரதை, உஷார், கப்சிப்!' என்றெல்லாம் எச்சரிக்கை செய்து தான் தோழிக்குச் சொல்லியிருப்பாள் அந்த மதி மந்திரியின் மனைவியும்.

* * *

இந்தப் பீடிகையுடன், கம்பன் காட்டப் போகும் ஒரு குட்டி 'ஸினிமா'வைப் பார்ப்போம்.

### அறிந்தனர் தோழியர்

ஆண்டை அந்நிலை
யாக, அறிந்தனர்
பூண்ட காதலர்,
பூட்டவிழ் கொங்கையர்

[ ஆண்டை — அவ்விடத்தில். பூட்டு — ரவிக்கையின் முடி. ]

என்று சூத்திரதாரன் அறிவிக்க, நாம் அந்தக் காட்சியைப் பார்க்கத் தொடங்குகிறோம் கம்ப நாடக மேடையிலே.

மந்திராலோசனையின் முடிவை அறிந்து கொண்டவர்கள் பெண்கள் என்றால், அந்த ரகஸ்யம் எப்படிச் சிறகடித்து பறக்கும் என்பதைச் சொல்லவும் வேண்டுமா? தங்கள் பேரன்பிற்குரிய ஒருத்தியோடு அதைப் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்ற ஆசை இவர்களைச் சும்மா இருக்க விடுமா? சரி, யார் இவர்கள்? அந்தப் பேரன்பிற்குரிய அவள் யார்? நாமும் இவர்களைப்போல் ஆத்திரப் படாமல், போகப் போகத் தெரிந்து கொள்ளலாமே.

"அவள் இதை அறிந்தால் எப்படி ஆச்சரியப் படுவாள்? ஆனந்த வெறி பிடித்துக் கொள்ளாதா? அவள் காதில் இந்தச் செய்தியைப் போட வேணும், அவளைப் பிரமிக்கச் செய்து பார்க்க வேணும்!" என்று எண்ண எண்ண அப் பெண்களுக்கு உள்ளம் குளிர்ந்து உடம்பு பூரிக்கிறது. இதைத் தான் "பூண்ட காதலர், பூட்டவிழ் கொங்கையர்" என்ற தொடர் குறிப்பிடுகிறது.

## என்ன ஓட்டம்!

தலைவியின் ஆனந்தமே தங்கள் ஆனந்தம் என்று கருதும் அவர்கள் தலைவிரி கோலமாய் ஓடுவதைப் பார்க்கிறோம்:



நீண்ட கூந்தலர்,
நீள்கலை தாங்கலர்,
ஈண்ட ஓடினர்,
இட்டிடை இற்றிலர்!

[கலை - சேலை. தாங்கலர் - தாங்காதவர்களாய். ஈண்ட - நெருங்க. இட்டிடை - நுட்பமான இடை.]

ஓடும் விசையால் கூந்தல் அவிழ்ந்து பிரிந்து தொங்க, அவர்களுடைய நீண்ட புடவைகளும் குலைந்து தரையைப் பெருக்கி வருகின்றனவாம். அவர்களோ அவற்றையெல்லாம் சிறிதும் லட்சியம் செய்யாதவர்களாய்ப் பந்தய ஓட்டம் ஓடுவதுபோல் ஓடிக் கொண்டிருக்கிறார்கள். ஒருவரை ஒருவர் நெருக்கி இடித்துக் கொண்டு ஓடுகிறார்கள். 'இடை ஒடியவில்லை, அவ்வளவுதான். ஐயோ பாவம்!' என்ற ஆறுதல்தான் நமக்கு.

## என்ன ஆட்டம்!

அப் பெண்களை இப்படிக் குடல் தெறிக்க ஓடச் செய்வது அந்த உள்ளங்களில் ஓடும் ரகஸ்யத்தின் வேகமேயாகும். அந்த வேகத்தில் ஓட்டம் மட்டுமா? ஆட்டமும் கூட. மின்னல்போலப் பாய்ந்து நேர் கோட்டிலே போய்க் கொண்டிருந்தவர்கள் இப்போது பம்பரம் போல் ஆடுகின்றனர். ஏன்? தங்கள் அவசரத்தை மறந்து விட்டார்களா?

மலைப் பக்கத்திலுள்ள ஒரு நீரோடைக்கு அருகில் ஒரு சிறுவன் பல நிறமுள்ள பூக்களைக் கொய்து விளையாடுகிறான் என்று வைத்துக் கொள்வோம். விளையாட்டின் முடிவில் அந்த அழகிய பூக்களை அவன் அந்த நீரோடையில் போட்டுவிடுகிறான். அவை எவ்வளவு விசையாக ஓடுகின்றன! எனினும் எப்போதும் நேராக ஓடிச் செல்வதில்லை. ஒரு சுழியில் அகப் பட்டுக் கொண்டதும் அந்த மலர்கள் தாங்கள் போய்க் கொண்டிருந்த அவசரத்தை மறந்துவிட்டாற் போல அப்படியே சுற்றிச் சுற்றிச் சுழன்று கொண்டிருக்கின்றன. அந்த விதமாகவே, உவகை — வெள்ளத்திலே சென்ற பெண்களும் முதன் முதல் நேராகவும் விசையாகவும் ஓடினார்கள். பிறகு ஆனந்த வெறியாகிய சுழியிலே அகப்பட்டுக் கொள்ளுகிறார்கள். இந் நிலையில் அவர்கள் சுற்றிச் சுழன்று ஆடாமல் வேறு என்ன தான் செய்யக் கூடும்?

## என்ன பாட்டு!



ஆடுவது மட்டுமா? அவர்கள் பாடவும் செய்கிறார்கள். பெண்கள் பாடுவதைக் கம்ப நாடகத்தில் பல இடங்களில் பார்க்கலாம். 'என்ன பண்ணழகு! தாளம் தவறுவதே இல்லை!' என்று வியக்கும்படி இருக்கும். 'இவர்கள் சிறிதாவது தாளம் தவறிப் பாடலாகாதா? ஒரு தரமாவது இவர்களை அந்த நிலையில் கண்டு பிடிக்க வேண்டாமா?' என்று கூடக் குறும்பாகக் கவிஞன் எண்ணிச் சமயம் பார்த்துக் காட்டுவது போல், நமக்கு இதோ ஓடியும் ஆடியும் போகும் பெண்களைச் சுட்டிக் காட்டுகிறான். அவர்கள் பாட்டில் இப்போது தாளம் தவறி விடுகிறது என்று குதுகலமாய்க் காட்டுவது போலிருக்கிறது:

ஆடு கின்றனர்,
பண் அடை வின்றியே
பாடு கின்றனர்!

[அடைவு — முறை.]

## பேச்சே இல்லை!

இப்படிப் பெண்கள் ஒரே குதூகல வெறியாக நிலை தடுமாறி ஆடிக் கொண்டும், ராக தாளம் பிசகிடப் பாடிக் கொண்டும் இருப்பதைப் பார்க்கிறவர்களுக்கெல்லாம் ஒரே பிரமிப்பு. அவர்கள் உயர்குலப் பெண்கள் என்பதும், அவர்களுடைய அந்தஸ்து மிகவும் உயர்ந்தது என்பதும், எல்லாருக்கும் தெரியும். 'என்ன விசேஷமோ?' என்று அறிந்து கொள்ளும் ஆவலுடன் அவர்களைப் பார்க்கிறார்கள், அங்கே வருகிறவர்கள் போகிறவர்களெல்லாம். அவ்விதமாகப் பார்ப்பவர்களிடம் இவர்கள் ஏதாவது பேசுகிறார்களா? பேச்சே வரவில்லையாம். உணர்ச்சி அப்படி நிறைந்து ததும்புகிறது.

## ஒரே அழகான கும்பிடு!

அந்த ஜனங்களைக் கை கூப்பி அஞ்சலி செய்கிறார்கள் இந்தப் பெண்கள். ஆம், ஜனங்களால் கை கூப்பி வணங்கத் தக்க பதவியிலுள்ள இப் பெண்கள் இப்போது தாம் பார்க்கிறவர்களை யெல்லாம் கும்பிடுகிறார்கள், 'எல்லாம் உங்கள் பாக்கியந்தான்' என்பது போல. 'கரம் குவிகின்றனர்' என்பதில் அந்த அழகிய கும்பிடு பிரத்தியட்சமாகி விடுகிறது.

## நாணமும் துறந்தனரா?

இந் நிலையில் இப் பெண்கள் பிறரைக் கண்டு ஒதுங்கிப் போகவும் இல்லை. தம்மைப் பார்க்கிறவர்களுக்கு அதி சமீபத்திலேயே போகிறார்கள். நாணத்தை மறந்தோ, துறந்தோ, அவர்களை இடித்துக் கொண்டு போகிறார்கள் என்றும் ஊகிக்கலாம்:

பார்த்தவர்க் கேகரம்
குவி கின்றனர்;
சொல்லுவ(து) ஓர்கிலர்;
மாடு சென்றனர்
மங்கையர் நால்வரே

[ஓர்கிலர் - அறியாதவர்களாய்.
மாடு - சமீபத்தில், பக்கமாக.]

## பார்க்கிறாள் தலைவி

இப்படி யெல்லாம் ஆடிப் பாடி ஓடி வருகிறவர்கள் நாலு பெண்கள் என்று காட்டுகிறான் கவிஞன். இவர்கள் ஓர் அரண்மனைக்கருகே வந்து விட்டார்கள். இவர்களைப் பார்க்கிறாள் ஒரு அம்மாள். ஆசையோடு வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டேயிருக்கிறாள். 'இவர்கள் இப்படி ஆத்திரமாக வருவதற்குக் காரணம் தான் என்ன?' என்று நோக்குகிறாள்.

# சித்திர ராமாயணம்

பி. ஸ்ரீ.

## 115. தாயின் பிரார்த்தனை

கௌசலைமீதுள்ள அன்பை (காதலை) அச்சேடியர்கள் பெருமையோடு ஆபரணமாகப் பூண்டிருக்கிறார்கள் என்று நாம் கருதும்படி அவர்களைக் கவிஞன் "பூண்ட காதலர்" என்று குறிப்பிட்டான். அவர்களைத் தானும் காதலோடு நோக்கினாளாம் கௌசலை. நோக்கி என்ன செய்கிறாள்? பாருங்கள், கேளுங்கள்:

கண்ட மாதரைக்
காதலின் நோக்கினாள்,
கொண்டல் வண்ணனை
நல்கிய கோசலை;
"உண்டு பேர்உவ-
கைப்பொருள், அன்னது,
தொண்டை வாயினிர்!
சொல்லுமின் ஈண்(டு)" என்றாள்.

[ காதலின் — காதலோடு. கொண்டல் வண்ணன் — நீலமேக வர்ணனாகிய ராமன். நல்கிய — பெற்றுக் கொடுத்த. பேர் உவகைப் பொருள் — பெரிய சந்தோஷச் சரக்கு. அன்னது — அது. தொண்டை வாயினிர் — கொவ்வைக் கனிபோலச் சிவந்த வாயை உடையவர்களே. சொல்லுமின் — சொல்லுங்கள். ஈண்டு — இப்பொழுதே. ]

முதலில் கண்டாளாம் அம்மாதரை; பிறகு நோக்கினாளாம். (இந்த இரண்டு வார்த்தைகளுக்குமுள்ள நுட்பமான பொருள் வேற்றுமை கவனிக்கத் தக்கது.)

கொண்டல் வண்ணனை
நல்கிய கோசலை

என்ற தொடர்தான் எவ்வளவு வசீகரமாய் அமைந்திருக்கிறது! கொண்டல் வண்ணனையும் கோசலையையும் இவ்வளவு வசீகரமாக இசைத்து நிற்கும் 'நல்கிய' என்ற தமிழ்ச் சொல்லின் ஆற்றலைத் தான் பாருங்கள்.

'உலகத்திற் கென்றே பெற்றுக் கொடுத்த' என்ற பொருளை எவ்வளவு நுட்பமாக வெளியிடுகிறது!

வள்ளுவன் தன்னை
  உலகினுக் கேதந்து
வான்புகழ் கொண்ட
  தமிழ் நாடு

என்று பாரதியார் பாடியிருக்கிறு ரல்லவா? இந்தத் தமிழன்னை போல அந்த அன்னை கௌசலையும் ராமனை உலகினுக்கே தந்து வான்புகழ் சூடிக் கொண்டாள் என்பது கவிச் சக்ரவர்த்தியின் குறிப்பு.

## மானஸிக மகுடதாரணம்

சேடியர்கள் பக்கத்தில் வந்ததும் கௌசலை, "உங்களிடம் ஏதோ ஒரு பெரிய சரக்கு, சந்தோஷச் சரக்கு, இருக்கிறது—எனக்குத் தெரியும். உடனே காட்டி விடுங்கள்" என்று தோழமை உணர்ச்சி தோன்றக் கொஞ்சிக் கேட்கிருள். கேட்டதும், கோவ்வைக் கனி போன்ற அவர்கள் வாய் துடிக்கிறது. பேருவகையில் முழுக்க இழந்திருந்த பேச்சுத்திறனும், இப்போது ஒருவாறு அவர்களுக்கு வந்து விடுகிறது:

"மன்நெ டுங்கழல்
  வந்துவ ணங்கிடப்,
பன்னெ டும்பகல்
  பார்அளிப் பாயென,
நின்நெ டும்புதல்
  வன்தனை நேமியான்
தொல்நெ டும்முடி
  சூட்டுகின் றுன்" என்ருர்.

[ மன் — மாட்சிமை பொருந்திய. நெடுங்கழல் — வீரக் கழல் அணிந்த பெரிய பாதங்கள். பல — பல. பார் — பூமி, (இங்கே) ராஜ்யம். அளிப்பாய் — காப்பாய். என — என்று சொல்லி. நின் — உன். நெடும் புதல்வன் — மூத்த பிள்ளை. நேமியான் — சக்ரவர்த்தி. தொல் — பழமையான; பரம்பரையாக வந்த. நெடுமுடி — பெரிய கிரீடம். ]

கௌசலை புதல்வன் தன் பெருவீரத்திற்கு அறிகுறியாகப் பெரிய வீரக்கழல் அணிந்து சிங்காசனத்தில் புருஷ ஸிம்மமாக வீற்றிருப்பதும், அந்தப் புதிய சக்ரவர்த்தியின் அடிகளில் முடி பொருந்தும்படி மன்னர்களெல்லாம் ஒருவர் பின் ஒருவராக வந்து விழுவதும், பிறரும் அப்படியே அடி விழுந்து வணங்குவதும், அப்பெண்களின் மனக்கண் முன் சித்திரக் காட்சிகளாகத் தோன்றுகின்றன. 'இதுதான் சக்ரவர்த்தியாக இருப்பது' என்று இவர்கள் எண்ணுகிருர்கள். இந்த மானஸிக மகுடாபிஷேகத்திலே, புரோகிதராகிய வசிஷ்டர் உதவியும் தேவையில்லை. இதில் கிரியைகள் இல்லை, வேறு மந்திர மில்லை!

கௌசலையை நோக்கி இச் செய்தி சொல்லும் தோழிகள், 'உன் புதல்வனுக்கு' என்று சொல்லாமல் 'உன் மூத்த புதல்வனுக்கு' என்று சொல்வதைக் கவனியுங்கள். ராமன் கௌசலையின் ஏக புத்திரன். சரி, அவளோ 'ராமன் வேறு, அவன் தம்பியர் வேறு' என்று பாராமல்

அவர்களையும் தன் புதல்வர்கள் போலவே கருதி அன்பு செய்கிறான். எனவே 'எந்தப் புதல்வனுக்கு?' என்று சந்தேகம் உண்டாகக் கூடு மல்லவா?

மேலும், முடி சூட்டப் போவதை 'முடி சூட்டுகின்றான்' என்று நிகழ் காலத்திலே தெரிவிக்கிறார்கள். பட்டாபிஷேக நிகழ்ச்சி அவ்வளவு தெளிவாக, அவ்வளவு பிரத்தியக்ஷமாக அவர்கள் மனக் கண் முன் நிகழ் கிறது.

## மகாராணியும் இளைய ராணியும்

கௌசலைக்குத் தோழிகளி லெல்லாம் சிறந்த தோழி சுமித்திரை தான். இவளிடம் கௌசலை நேரில் போய்ச் செய்தி தெரிவித்த பின் இருவரும் தங்கள் குலதெய்வத்தின் சந்நிதிக்குப் போகிறார்கள்:

துன்னு காதல்-
சுமித்திரை யோடும்போய்,
மின்னு நேமியன்
மேவிடம் மேவினள்.



[ துன்னு — நெருங்கிய. நேமியன் — சக்ரத்தோடு கூடிய விஷ்ணு. மேவிடம் — பொருந்தி யிருக்கும் கோயில். மேவினள் - அடைந்தாள்.]

சுமித்திரைக்கும் கௌசலைக்கும் நெருங்கிய நேசம் உண்டு என்று இங்கே கவிஞன் குறிப்பிடுவது கவனிக்கத் தக்கது. இப்போதே கைகேயி இவர்களோடு ஒத்து வாழாமல் வேறு யிருக்கிறாள் என்பது குறிப்பு. இது பின்வரும் 'கைகேயி சூழ்வினை'க்கு விதையாக விழுந்திருக்கிறது.

சுமித்திரையோடு கௌசலை, சக்ரவர்த்திக்கும் சக்ரவர்த்தியான இறைவன் சந்நிதியை அடைந்து அங்கே தன் மகனுடைய நன்மைக்காக ஒரு பிரார்த்தனை செய்துகொள்ளப் போகிறாள். 'அவனுக்குப் பெருஞ் செல்வம் வேண்டும், நீண்ட ஆயுள் வேண்டும், நல்ல குழந்தைகள் வேண்டும், நல்ல அதிர்ஷ்டம் வேண்டும்' என்றெலலாம் பிரார்த்திக்கவில்லை. 'நீண்ட காலம் ராமன் சக்ரவர்த்தியாக வீற்றிருக்க வேண்டும்' என்று கூடப் பிரார்த்தனை செய்து கொள்ளவில்லை :

என்வ யிற்(று)அரு
மைந்தற்(கு) இனிஅருள்
உன்வ யத்த(து)என்றாள்
உல(கு) யாவையும்
மன்வ யிற்றின்
அடக்கிய மாயனைத்
தன்வ யிற்றின்
அடக்கும் தவத்தினள்.

[ வயிற்று அரு மைந்தன் — வயிற்றிலே பிறந்த அருமையான மைந்தன். வயத்தது — வசமானது. மன் வயிறு — நிலை பெற்ற வயிறு. ]

"இறைவனே! என் வயிற்றில் பிறந்த அருமை மகனாகிய ராமனுக்கு இனி அருள் செய்ய வேண்டியதெல்லாம் உன் வசமாகவே யிருக்கிறது" என்று மிகவும் சுருக்கமாகப் பிரார்த்திக்கிறாள் கௌசலை. சுமித்திரை மௌனமாய்ப் பக்கத்திலிருந்து அதே பிரார்த்தனையில் மனம் ஒன்றிப் போகிறாள்.

"ராமனுக்கு இது நன்மை, இது நன்மையன்று என்பதை நாங்கள் அறியோம். எல்லாம் உன் சித்தம், உன் திருவருள். உன் சங்கல்பம் இனிது நிறைவேறுவதாக" என்பது தான் அறிவிற் சிறந்த கௌசலையின் பிரார்த்தனை.

இன்னது தான் நீடித்த நன்மை தரும் என்றோ, இன்பம்தான் நன்மை, துன்பம் நன்மையில்லை யென்றோ, முன் கூட்டியே தெளிவாகத் தெரிந்து கொள்ளக் கூடிய ஞானம் மனிதர்களுக்கு இல்லை. எனவே கௌசலையைப் போல், 'உன் அருள் நிறைவேறுவதாக' என்று பிரார்த்தனை செய்வதே அறிவுடைமைக்கு அழகு.

உடனே சிங்காதனம் ஏறி அரசாட்சி செய்வது ராமனுக்கும் உலகுக்கும் நன்மையா? நாடு துறந்து காடு செல்வது தானே உலக நன்மையாக முடியப் போகிறது?

ஆகவே கௌசலை ஈச்வர சந்நிதியில் செய்துகொண்ட பிரார்த்தனையைக் காட்டிலும் பொருத்தமானதும், பொருள் செறிந்ததும், அழகானதும் வேறொன்றும் இல்லை யெனலாம்.




## பி. ஸ்ரீ.

### 116. சோதிடம் பலித்ததா?

அரண்மனை - அந்தப்புரம் பிரார்த்தனையும் நோன்பும் தான தர்மங்களுமாய் இருக்க, சக்ரவர்த்தியோ அந்த அரண்மனையிலேயே மிகப் பெரிய ஒரு மண்டபத்தில் தானும் சோதிடர்களுமாய், கிரக நட்சத்திரங்களுடன் பொழுது போக்கிக் கொண்டிருந்தான்.

பட்டாபிஷேகத்துக்கு நல்ல நாள் பார்க்க வேண்டும் என்ற ஒரே எண்ணந்தான் இப்போது சக்ரவர்த்திக்கு. சோதிடரோடு சோதிடனாகி அந்த முகூர்த்தத்தைக் கண்டு பிடிக்க விரும்புகிறான்; அந்தக் கிரக நட்சத்திரங்கள் சொல்லும் ரகஸ்யத்தை அறிந்து கொள்ள விரும்புகிறான்.

சக்ரவர்த்தி சாஸ்திரிகளுடைய திறமையை முடிவுறச் சோதித்துப் பார்த்தான். அத்திறமையைப் பாராட்டி உபசரித்தான். பின்பு அவர்களை நோக்கி, தன் க்ஷத்திரிய கர்வம் தோன்ற, "அந்தப் பரசுராம கர்வபங்கம் செய்த வீர மைந்தனுக்கு முடி சூட்ட வேண்டும், ஒரு நல்ல நாள் பாருங்கள்; முதன்மையான முகூர்த்தம் பார்த்துச் சொல்லுங்கள்" என்று கேட்டான்.

பரசுராம கர்வ பங்கத்தைக் குறித்துப் பொதுவாக க்ஷத்திரிய அரசர்கள் அனைவரும், சிறப்பாகத் தசரதச் சக்ரவர்த்தியும், எவ்வளவோ கர்வம் கொண்டிருக்கிறார்கள் என்பதைக் கவிஞன் ஞாபகப்படுத்திக் கொண்டே வந்திருக்கிறான். பரசுராமன் பிராம்மணன் என்பது கவனிக்கத் தக்கது. நாள் பார்த்து ராமனுக்கு முடி சூட்டுவது க்ஷத்திரிய குலத்திற்கே வெற்றி என்பது குறிப்பு.

#### நாள் பொருந்துமா? முடி பொருந்துமா?

சக்ரவர்த்தியின் விருப்பத்திற்கிணங்க, அவர்களும் கணக்குப் போட்டுப் போட்டுப் பார்த்தார்கள். என்ன அதிசயம்! "நாளைக்கே நல்ல முதன்மையான நாள்தான்" என்று குதூகலமாய்ச் சொல்லுகிறார்கள். பிறகு என்ன நடக்கிறது?

"பொருந்தும்நாள் நாளை,உன்
புதல்வற்(கு)" என்றனும்
திருந்தினர், இனியசொல்
கேட்ட செய்கழல் -
பெருந்திண்மால் யானையான்,
"பிழைப்பில் செய்தவ
மருந்தனன் வருகெ"ன
வசிட்டன் எய்தினன்.

[ புதல்வற்கு — புதல்வனுக்கு. திருந்தினர் — சோதிட அறிவில் திருந்தியவர்கள். செய்கழல் — செம்மையானதும், செம்பொன்னால் செய்ததுமான வீரக் கழல்; வீரத்திற்கு அறிகுறியாக முற்காலத்திலே காலில் அணிந்து கொள்ளும் ஆபரணம். திண் மால்யானை — வலிய மத யானை. மால் யானையான் — சக்ரவர்த்தி; யானை போன்றவன், யானைப் படைகளை உடையவன். பிழைப்பில் — தவறுதல் இல்லாத. தவ மருந்து — தவக் கடலில் தோன்றிய அமிர்தம். ]

"பொருந்தும் நாள் நாளை உன் புதல்வனுக்கு" என்று சோதிடர்கள் சொன்னதும், "நாளைக்கே கிரீடம் பொருந்தி விடும் தன் அருமைப் புதல்வன் முடிமீது!" என்றே நிச்சயித்து விட்டான் சக்ரவர்த்தி.

## கடலமுதமும் ஞானபொக்கிஷமும்

"என்ன இனிய சொல்!" என்று கேட்ட செவியும் தித்திக்க, வீர தசரதன், "தவக் கடலில் தோன்றிய அமிர்தம்! வருக" என்றான், அருமையாகவும் அபார பக்தியுடனும். உடனே வந்து விட்டது அந்த அமிர்தம் வசிஷ்ட வடிவத்திலே.

குருவிடம் சோதிடர்களின் அபிப்பிராயத்தைத் தெரிவித்து, "பட்டாபிஷேகத்திற்காக முன்கூட்டிச் செய்ய வேண்டிய காரியங்களை இன்றே செய்து முடித்து விடும்" என்று அவரைத் துரிதப்படுத்துகிறான். இந்த மகத்தான சந்தர்ப்பத்தை முன்னிட்டு மகனுக்கு விசேஷ உபதேசம் ஏதாவது வசிஷ்டர் தமது ஞான பொக்கிஷத்திலிருந்து அள்ளிக் கொடுக்கவேண்டு மென்றும் ஆசைப்படுகிறான்:

"நல்லியல் மங்கல
நாளும் நாளை,அவ்
வில்இயல் தோளவற்(கு);
இன்று வேண்டுவ
ஒல்லையின் இயற்றி,நல்
உறுதி வாய்மையும்
சொல்லுதி பெரி(து)"எனத்
தொழுது சொல்லினன்.

[ வில் இயல் — வில் பொருந்திய. தோளவன் — தோளை உடைய ராமன். வேண்டுவ — வேண்டிய முன் ஏற்பாடுகள். ஒல்லையின் — விரைவாக. நல் உறுதி வாய்மை — நல்ல உறுதியான உண்மைப் பொருள். பெரிது சொல்லுதி — பெரிதாய்ச் சொல்லுவீராக.]

மறு நாள் ராம பட்டாபிஷேகம் இனிது நடை பெறும் என்பதிலே தான் சக்ரவர்த்திக்கு எவ்வளவு நம்பிக்கை! இந்த நம்பிக்கைதான், வசிஷ்டரிடம் மேலே குறித்த இரு வகைக் காரியங்களையும் இப்படி ஒப்படைத்து விடுகிறது.

'வில் இயல் தோளவன்' என்று ராம வீரத்தைக் குறிப்பிடுகையில், ராமன் தாங்கும் கோதண்ட வில் மட்டும் குறிக்கப்பட வில்லை; ஒடிந்து போன சிவ தனுசும், பரசுராமன் நடுங்கிப் போகும்படி வளைக்கப்பட்ட விஷ்ணுவில்லும், குறிப்பாக நினைப் பூட்டப் பெறுகின்றன.

புதிதாய்ப் பட்டம் கட்டிக் கொள்ளும் ராஜகுலவீரனுக்குப் பல வகை அரச நீதிகளை அச்சமயம் உபதேசிப்பதாகப் பல நூல்களிலும் காணலாம். தசரதன் தானே ராமனை வரவழைத்து நீதிகளை உபதேசித்ததாக வால்மீகி ராமாயணம் சொல்லுகிறது. கம்பனோ, ராமன் மாளிகைக்கே வசிஷ்டர் போய் உபதேசிப்பதாகக் கதையை மாற்றி விடுகிறான்.

## 'நான் முன்னே! நான் முன்னே!'

வசிஷ்டர் என்ற ஞானத்தந்தை தமது ஞானபுத்திரனைத் தாம் இருக்கும் இடத்திற்குக் கூட வரவழைக்க வில்லையாம். உத்ஸாகம், குருவைச் சிஷ்யன் இருக்கும் இடத்திற்கே தள்ளிக் கொண்டு போய் விடுகிறது :

முனிவனும், உவகையும்
தானும் முந்துவான்,
மனுகுல நாயகன்
வாயில் மன்னினான் ;
அனையவன் வரவுகேட்(டு)
அலங்கல் மார்பனும்,
இனி(து)எதிர் கொண்டுதன்
இருக்கை எய்தினான்.

[உவகை — மகிழ்ச்சி. மனுகுல நாயகன — மனுவின் குலத்திலே வந்த ராமன். வாயில் — மாளிகை வாசல். மன்னினான் — அடைந்தான். அனை



யவன் — அம் முனிவன். அலங்கல் — மாலை. இருக்கை — இருப்பிடம்.]

'நான்முன்னே! நான்முன்னே!' என்று போட்டிபோட்டுக்கொண்டு உவகையும் தாமும் பந்தய ஓட்டம் ஓடுவது போல, அவ்வளவு துரிதமாக வசிஷ்டர் ராமனுடைய அரண்மனைக்கே ஓடிவந்து விட்டார். அந்த வரவு கேட்டதும், ராமனும் மார்பிலே மாலை யசைய வீட்டுக்குள்ளே யிருந்து ஓடி வந்து குருவை வரவேற்று அழைத்துக் கொண்டு உள்ளே போகிறான்.

## வள்ளல் யார்?

வசிஷ்டர் போனதும் போகாததுமாய் ஒரு நீண்ட உபதேச உபந்யாசத்தைத் தொடங்கி விடவில்லை. சாவதானமாக ராமன் முகத்தை நோக்குகிறார். "நாளை உனக்குப் பட்டாபிஷேகம்" என்று சொல்லி மறுபடியும் அந்த முகத்தை உற்று நோக்குகிறார்:

ஒல்கலில் தவத்(து)
  உத்தமன், ஓதுநூல்
மல்கு கேள்வியன்,
  வள்ளலை நோக்கினான்:
"புல்கு காதல் -
  புரவலன், போர்வலாய்!
நல்கும் நானிலம்
  நாளை நினக்(கு)" என்றான்.

[ஒல்கல்இல் — தளர்ச்சி இல்லாத. மல்கு — நிறைந்த. கேள்வியன் — கேள்விகளை உடையவன்; நூற்பொருள் முதலியவற்றைக் கேட்டுக் கேட்டு ஆராய்ந்து பார்த்தவன். வள்ளல் (இங்கே) வண்மைக் குணமுள்ள ராமன். புல்கு — தழுவிக் கொள்ளும். புரவலன் — அரசன்; (இங்கே) சக்ரவர்த்தியான தசரதன். போர் வலாய் — போரில் வல்லவனே. நல்கும் — கொடுப்பான். நானிலம் — மலை, காடு, நாடு, கடற்கரை போன்ற நால்வகை நிலங்களோடு கூடிய பூமி; (இங்கே) கோசல மகா ராஜ்யம்.]

தவத்திலும் நூலாராய்ச்சியிலும் ஒருங்கே கரைகண்ட வசிஷ்டர் யாரை நோக்கினார்? வள்ளலை நோக்கினாராம். ஞானோபதேசம் செய்யப் போன வசிஷ்டருக்கே எதிர் நின்று ஞானத்தை வாரி வழங்கத்தக்க வள்ளல் போலக் காண்கிறான் ராமன். அத்தகைய வள்ளலிடம் முதல் முதல் தந்தையின் காதலையும் அருளையும் வற்புறுத்துகிறார் வசிஷ்டர். "அன்போடு சக்ரவர்த்தி தரப்போகிற ராஜ்யத்தை நீயும் அன்பு பெருக ஆள வேண்டும்; தந்தையின் வேண்டுகோளை மறுக்காத வள்ளலாகவும் நீ விளங்க வேண்டும்" என்பது வசிஷ்டர் குறிப்பு.

* * * *

'முடிபுனை முதன்மை நாள்' கேட்ட சக்ரவர்த்திக்கு, "பொருந்தும் நாள் நாளை" என்றனர் சோதிட சாஸ்திரிகள். வசிஷ்டரும் தசரதனைப் போல் 'குறித்த முகூர்த்தத்தில் கிரீடம் ராமன் தலையிலே ஏறிப் பொருந்தி அமர்ந்து விடும்!' என்றே நம்புகிறார். அவ்வளவு நம்பிக்கை சோதிடத்திலே முனிவருக்கும் சக்ரவர்த்திக்கும். இந்தச் சோதிடம் பலித்ததா?

ஆனால் சோதிடப் பிரியர்கள் சொல்லலாம்,—"'பொருந்தும் நாள்' சொன்ன சோதிடர்கள், 'பொருந்தும் முடி!' எனச் சொல்லவில்லையே!" என்று.




பி. ஸ்ரீ.

## 117. புதுமையான அரசியல்

‘நாளையே நீ சக்ரவர்த்தி ஆகப் போகிறாய்’ என்று வசிஷ்டர் சொல்லியதைக் கேட்டும், ராமன் முகத்திலே விசேஷ மகிழ்ச்சி ஒன்றும் ஏற்பட வில்லை. இதைக் கவனித்த முனிவர் “ஆஹா, எப்பேர்ப் பட்ட ஞான புத்திரன்! கிரீடத்தில் மோகமில்லை; அதை வெறுக்கவு மில்லை. ஆட்சியைக் கடமையாகவும் கைங்கரியமாகவும் உணர்ந்திருக்கிறான். இவன் தான் இச்சந்தர்ப்பத்தில் ஒரு விசேஷ உபதேசம் பெறத் தக்கவன். நவயுக அரசியல் - கொள்கை ஒன்றை — உலகத்தைப் புது உலக மாக்கும் கொள்கையை — இன்றே இப்போதே உபதேசிப்பேன்” என்று தீர்மானித்துக் கொண்டார்.

### உபதேச பீடிகை

உடனே வசிஷ்டர் என்ன செய்கிறார்? பார்க்கலாம்

என்று பின்னும்
இராமனை நோக்கினன்;
“ஒன்று கூறுவ(து),
ஒன்(று)உறு திப்பொருள்;
நன்று கேட்டுக்
கடைப்பிடி, நன்(று)” எனத்
துன்று தாரவன் -
சொல்லுதல் மேயினன்.

[கடைப்பிடி — உறுதியாகக் கொள். துன்று தாரவன் — நெருங்கிய மாலையையுடைய ராமன். சொல்லுதல் மேயினன் — சொல்லத் தொடங்கினன்.]

தாம் சொல்லப் போகும் உறுதிப் பொருளுக்கு வசிஷ்டர் போட்டுக் கொள்ளும் பீடிகையைப் பாருங்கள். “அலட்சியமாய்க் கேட்கலாகாது. கேட்ட பின் செயலில் கொண்டுவர வேண்டும்; அதிலும் அலட்சிய புத்தி

கூடாது'' என்றெல்லாம் சொல்லிவிட்டுத் தமது அரசியல்-வேதாந்தத்தை உபதேசிக்கிறார்.

## புதிய அரசியல்-சூத்திரம்

வசிஷ்டர் சொல்லப் போகும் கொள்கை ஓர் அரசியல்-சூத்திரமாகக் கம்பனால் பால காண்டத்திலேயே வெளியிடப் பெற்றிருக்கிறது.

உயிரெலாம் உறைவதோர்
உடம்பும் ஆயினான்
[உறைவது — வசிப்பது ; தங்குவது.]

என்று தசரத சக்ரவர்த்தியைக் கவிக்கூற்றாக வர்ணித்திருப்பதை இப்போது ஞாபகப் படுத்திக் கொள்ள வேண்டும். இவ்வர்ணனையில் தான், "ஜனங்கள் உயிர் ; அரசாங்கம் உடம்பு'' என்ற அந்த அரசியல்-சூத்திரம் அடங்கி யிருக்கிறது. அரசாங்கம் என்பது "உயிரெலாம் உறைவதோர் உடம்பு'' என்ற அரும்பெரும் கொள்கையோடு,

நெல்லும் உயிரன்றே,
நீரும் உயிரன்றே ;
மன்னன் உயிர்த்தே
மலர்தலை உலகம்

[ உயிர்த்தே - உயிராக உடையது. மலர் தலை - விரிந்த இடமுள்ளது. ]

என்ற சங்கப் புலவர் வாக்கை ஒப்பிட்டுப் பார்த்துக் கம்பனுடைய புதுமை யான அரசியல் - கொள்கையின் பொருளையும் பயனையும் தெரிந்து கொள்ளலாம்.

'மன்னனை உயிராக உடையது உலகம்'

என்ற கொள்கை கள்ளங் கவடற்ற பழைய காலங்களில் நல்ல பயனை அளித்து வந்தது என்று ஊகிக்கலாம். 'உடம்பைக் காட்டிலும் உயிரே முக்கியமானது' என்ற வேதாந்தம் பரவிய பின்பு, அரசர்களும் தங்களை ஜன சமூகத்தைக் காட்டிலும் வேறாகவும் முக்கியமாகவும் கருதலாயினர். எனவே, கம்பன் வசிஷ்டர் வாயிலாக ஒரு புதிய கொள்கையை வெளியிட விரும்பி, அதற்கு விதையையும் முன் கூட்டியே பால காண்டத்தில் விதைத்திருக்கிறான். அந்த வித்தின் விளைவே அயோத்தியா காண்டத்தில் வசிஷ்டர் ராமனுக்குச் செய்யும் உபதேசம்.

## சூத்திர பாஷ்யம்

ஆம், 'உயிரெலாம் உறைவதோர் உடம்பு' என்ற அந்த அரசியல்-சூத்திரத்தின் விரிவுரை தான் இதோ இப்போது வசிஷ்டர் கூறுவது :

வையம் மன்னுயிர்
ஆக,அம் மன்னுயிர்
உய்யத் தாங்கும்
உடல்அன்ன மன்னனுக்(கு),
ஐயம் இன்றி
அறம்கட வா(து),அருள்
மெய்யில் நின்றபின்
வேள்வியும் வேண்டுமோ?

[ வையம் - உலகம் ; ஜன சமூகம். மன் உயிர் - நிலை பெற்ற உயிர். உடல் அன்ன - உடம்பை ஒத்த. ]

"ஜன சமுதாயமே நிலைபெற்ற உயிராகும்; இந்த நிலை பெற்ற உயிர் உய்யுமாறு தாங்கும் உடலே அரசாங்கமாகும்" என்பது முன் இரண்டு அடிகளின் பொருள். 'மகா ஜனமே நிலை பெற்ற உயிர்; மன்னர் வருவர், போவர்!' என்று எவ்வளவு துணிவாகவும் அழுத்தமாகவும் வசிஷ்டர் குறிப்பிடுகிறார், பாருங்கள்!

'உடம்புகள் வருகின்றன, போகின்றன; உயிரோ தன் அபிவிருத்திக்கு ஏற்ற விதமாக உடம்புகளை மாற்றி மாற்றி அமைத்துக் கொள்கிறது' என்பது நம் மதக் கொள்கை அல்லவா? அப்படியே மக்களும் தங்கள் வளர்ச்சிக்கு ஏற்ற விதமாக உடலான அரசாங்கத்தை மாற்றி மாற்றி அமைத்துக் கொள்வர் என்பது வசிஷ்டர் குறிப்பு.

இக் குறிப்பிலிருந்து, 'மக்களுக்காகவே அரசாங்கம்; அரசாங்கத்திற்காக மக்கள் என்பதில்லை; அரசாங்கம் கருவி, மகாஜனமே கர்த்தா' என்னும் உண்மையும் உதயமாகிறது. இதனால்,

மன்னர்க்கு நீதி ஒருவகை — பிற
மாந்தர்க்கு நீதிமற் றோர்வகை

என்ற பாழான கொள்கை வீழ்த்தப்படுகிறது. எனவே ஐயமின்றி அரசாங்கத்திற்கும், நீதியும் நல்லொழுக்கமும் இன்றியமையாதன என்பதை வற்புறுத்துகிறார் வசிஷ்டர்.

அறம், அருள், மெய் இம்மூன்றும்—இம்மூன்றுமே—ஒழுக்கத்தின் உயிர்நிலை. உண்மை - அடி நிலம்; அருள் - வேர்; அறம் - செடி: இது கம்பன் ஒழுக்கத்தைப் பற்றி வெளியிடும் கொள்கை. இவ்வொழுக்கம் மக்களுக்கு எவ்வளவு அவசியமோ, அவ்வளவு அவசியமானது அரசாங்கத்திற்கும் என்கிறார் வசிஷ்டர்.



"அறம் கடவாது அருள் மெய்யில் நின்றபின்" (ஸாம்ராஜ்யமும் ஸம்ராட் பட்டமும் பெறுதற்குச் செய்யும்) ராஜசூயம் முதலிய வேள்விகளும் வேண்டுமோ?-என்று ராமனை நோக்கி வினவுகிறார் வசிஷ்ட முனிவர்.

தம் உள்ளத்திலே அரும்பி மலர்ந்து கொண்டிருந்த இப் புதிய அரசியல் - கொள்கையை வசிஷ்டர் ராமனுக்கே

வெளியிடுகிறார். எனினும் வசிஷ்டர் சகவாசத்தால் தசரத சக்ரவர்த்தியும் இத் தனிப் பெருங் கொள்கையை ஒருவாறு உணர்ந்திருந்ததாய்க் கருதலாம்.

## ஒழுக்கம், ஒரு திரிசூலம்

இக்கொள்கையை வசிஷ்டர் இன்னும் எவ்விதமாக விரித்துச் சொல்கிறார் என்பதை நோக்குவோம். ஒழுக்க வன்மை இன்றி வேறு எத்தகைய படை - வலிமை இருந்தபோதிலும் அது பயன் தருவதில்லை என்று வசிஷ்டர் கூறுவதையும் கவனிப்போம் :

உருளும் நேமியும்,
ஒண்கவர் எஃகமும்,
மருளில் வாணியும்
வல்லவர் மூவர்க்கும்,
தெருளும் நல்லற
மும்,மனச் செம்மையும்,
அருளும் நீத்தபின்,
ஆவதுண் டாகுமோ?

[ நேமி - சக்ராயுதம். ஒண் கவர் எஃகம் - சூலாயுதம். மருளில் - மயக்கமில்லாத. வாணியும் - வாக்கு என்ற சக்தியும். மூவர் - மும்மூர்த்தி. தெருளும் - தெளிவாகிய. நீத்த பின் - விட்ட பின்பு. ]

மும்மைப் பெருந் தெய்வங்களென்று கூறப்படும் மும்மூர்த்திகளுக்கும்கூட ஒழுக்கமே உயர்வு தருகிறது என்கிறார் வசிஷ்டர். இம்மூர்த்திகளைக் காட்டிலும் வல்லவர்கள் உலகத்தில் இல்லை; இவர்களுக்கு மேலான வல்லரசுகளும் இருக்க முடியாது.

இம்மூர்த்திகளில் ஒருவரான விஷ்ணு கையில் சக்காராயுதம் இருக்கிறது; திரிசூலம் இருக்கிறது சிவபெருமான் கையில். பிரம்மதேவனிடம் வாக்கின் சக்தி இருக்கிறது. இப்பேர்ப்பட்ட சக்திகள் இருந்தும் ஒழுக்கம் (அறம், அருள், மெய்) என்ற திரிசூலத்தைக் கைவிடுவார்களானால், இவர்களுக்கும் ஆகக்கூடிய நன்மை ஒன்றும் இல்லை. இப்படியிருக்க, வல்லவர் மூவருக்கும் இன்றியமையாத ஒழுக்கம் வல்லரசுகளுக்கு வேண்டாமென்பதில் பொருள் உண்டோ? - என்பது குறிப்பு.

## அன்பு நெறி

ஒழுக்கத்தின் பல வேறு அம்சங்களும் 'அன்பு' என்ற ஒன்றில் அமைந்தடங்குகின்றன. எனவே,

அன்பின் அல்லதோர்
ஆக்கமுண் டாகுமோ?

[ ஆக்கம் - செல்வம். ]

என்று கூறி வசிஷ்டர் அன்புநெறியைப் போர் வெறியோடும் கொலைகளோடும் சூழ்ச்சிகளோடும் பின்னிக்கிடக்கும் அரசியலில் பிணைக்கப் பார்க்கிறார்.

அன்புநெறியில் இயங்கும் அரசாங்கம் யாரோடும் பகை கொள்வதில்லை. அன்பு நெறியிலே பகை ஒடுக்கும்; போர் ஒடுக்கும், ஆனால் புகழ் ஒடுங்காது! - என்று உத்ஸாகமாய்ப் பேசுகிறார். பிறரை வேரோடு கெடுப்பது வெற்றி யன்று; பகைவர்களையும் அன்பினால் வசீகரித்து நல்வழிப் படுத்துவதே உண்மையான வெற்றி என்கிறார். இவ்விதமாக நடந்துகொள்ளும் அரசாங்கத்துக்குப் பெரியோரது அன்பே சிறந்த ஆயுதமாகும் என்றும் கூறுகிறார்.




பி. ஸ்ரீ.

## 118. என்ன ஆர்ப்பாட்டம்! என்ன அலங்காரம்!

நாளை ராம பட்டாபிஷேகம் என்று உத்ஸாகமாய் விளம்பரம் செய்கிறார்கள், ராஜ சேவகர்களான வள்ளுவர்கள். யானைமேல் பறையறைந்து, அவர்கள் எப்படிச் செய்தி தெரிவிக்கிறார்கள்? அந்த விளம்பரத்தைப் பொது ஜனங்கள் எவ்வளவு உத்ஸாகமாய்ப் பெற்றுக் கொள்கிறார்கள்!

'கவிஅமை கீர்த்திஅக்
காளை, நாளையே
புவிஅமை மணிமுடி
புனையும், என்றசொல்,
செவிஅமை 'நுகர்ச்சிய(து)
எனினும், தேவர்நம்
அவிஅமு தான(து)அந்
நகரு ளார்க்கெலாம்.

[கவி அமை - கவியிலே அமைகிற. அக்காளை - பிரசித்தி பெற்ற வீரனாகிய ராமன். புவி அமை - ராஜ்ய பாரம் அமைவதற்கு உரிய. நுகர்ச்சியது - உட்கொள்ளக் கூடியது. அவி அமுது - தேவர்கள் விரும்பி உண்ணும் உணவாகிய அமிர்தம்.]

### கவி அமைந்த கீர்த்தி

ராமனுடைய கீர்த்தியைக் 'கவி அமை கீர்த்தி' என்று கூறுவது கவனிக்கத் தக்கது. அது நிலத்தினும் பெரிதாய், கடலினும் ஆழ்ந்ததாய், வானினும் உயர்ந்ததாக இருந்த போதிலும், கவியையும் கடந்ததன்று. 'கவியிலே அமையத் தக்க கீர்த்தி' என்றுதான் சிறப்பிக்கிறான் கவிஞன். கவிதை என்ற தன் தொழிலைக் குறித்து எத்தகைய மகோன்னத அபிப்பிராயம் இத் தொழிலாளிக்கு!

காவிய நாயகியான சீதையைச் 'செஞ் சொல்-கவியின்பம்' என்று சிறப்பிக்கும் கவிஞன், காவிய நாயகனை இங்கே ராஜ சேவகர் கூற்றாகக் 'கவியமை கீர்த்தி அக்காளை' என்று குறிப்பிடுவது நன்கு சிந்தை செய்யத் தக்கது.

காதலின்பம் இன்னதென்று அறிந்து கொள்ளப் போகும் சீதையைக் 'கவியின்பம்' என்று காட்டி, பட்டாபிஷேகம் நடைபெறப் போகிறது என்று எல்லோரும் எண்ணி யிருக்கும் தருணத்திலே ராமனைக் 'கவி அமை கீர்த்தி' யாளன் என்று காட்டுகிறான்.

கவிதைக்கும் ராமனுடைய கீர்த்திக்கும்தான் எவ்வளவு பொருத்தம் ! இந்தக் கீர்த்தியை வசனத்தால் பேச முடியாது, எழுத முடியாது; நினைத்துப் பார்க்கும்போதே கவி ரூபமாக வந்து விடுகிறதாம். 'கவிதை' யில் அமையத்தக்கதுதான் ராமன் கீர்த்தி; ராமன் கீர்த்திதான் கவிதை யில் அமையத்தக்கது!' என்பது கம்பன் மனநிலை. ராமன் திருப்புகழ், கம்பன் மனோபாவத்திலே ஆவேசித்துக் கவிதையாக விளைந்திருக்கிறது. சீதைக்கும் ராமனுக்கும் உள்ள பொருத்தம் கம்பன் - கவிதைக்கும் ராமன் - கீர்த்திக்கும் உண்டு என்று கருதலாம்.

## புவி அமைந்த கிரீடம்

" 'கவி அமை கீர்த்தி' வாய்ந்த வீரன் 'புவி அமை மணி முடி' சூடிக் கொள்வான்" என்று பறை சாற்றினார்கள். ராமனுக்கு, 'மணி முடி' என்றால் பாரமான இரத்தின மரக்காலன்று; ராஜ்ய பாரம் சுமக்க வேண்டும் என்பதற்கு ஓர் அழகிய அறிகுறிதான்.

விளம்பரத்தைச் செவியால் பருகினார்கள் நகரவாசிகளெல்லாம். செவியிலேயே நாவின் சுவை கொண்டு தேவாமிர்தமாகப் பருகி அனுபவித்தார்களாம்.

இந்த ஆனந்த வெறியிலே நகரம் படும் பாட்டை என்னென்பது? அதையும் கம்பன்தான் கண்டு காட்டக் கூடும். உள்ளது உள்ளபடியே காட்டி விடுகிறான் :

ஆர்த்தனர், களித்தனர்,
    ஆடிப் பாடினர்,
வேர்த்தனர், தடித்தனர்,
    சிலிர்த்து மெய்ம்மயிர்
போர்த்தனர்; மன்னனைப்
    புகழ்ந்து வாழ்த்தினர்,—
தூர்த்தனர் நீள்நிதி
    சொல்லி னார்க்கெலாம்.

[ஆர்த்தனர் - ஆரவாரஞ் செய்தார்கள். சிலிர்த்து மெய்ம்மயிர் போர்த்தனர் - புளகாங்கிதமானார்கள்; உடம்பெல்லாம் மயிர்க் கூச்செறிந்தனர். நீள் நிதி - ஏராளமான செல்வம். தூர்த்தனர் - நிறைத்து விட்டார்கள்; வாரி இறைத்து விட்டார்கள்.]

செய்தி பரவுகிறது. சாலைகளிலும் சந்திகளிலும் மூலை முடுக்குகளிலும் ஒரே கூச்சல், ஏக ஆரவாரம், ஆர்ப்பாட்டம் — அலைமேல் அலையெறியும் ஆனந்த சமுத்திரம். எங்கே பார்த்தாலும் ஆடல் பாடல்தான்.

ஆடத் தெரிந்தவர், பாடத் தெரிந்தவர் என்றில்லை — எல்லாருமே ஆடினர்கள், பாடினர்கள். இந்த ஆனந்த வெறியை,

வேர்த்தனர், நடித்தனர்!

என்றெல்லாம் உச்ச நிலையில் கொண்டு காட்டி, செய்தி சொன்னவர்களுக்கெல்லாம் ஊரார் பரிசுகளை வாரி இறைப்பதையும் கண் முன் காட்டி விடுகிறது இச் செய்யுள். உத்ஸாக வெறியினிடையே, தசரத மன்னனையும் புகழ்ந்து வாழ்த்தினர்களாம், 'தான் ஒதுங்கிக் கொண்டு ராமனுக்குக் கொடுத்தானே புவி அமை மணி முடியை!' என்று.

நகர மாந்தர் அயோத்தியை அலங்கரிக்க ஆரம்பித்து விட்டார்கள். இப்போது கவிஞனுக்கு ஒரு சந்தேகம். அயோத்திதான் எப்போதும் நகரங்களின் அழகு - ராணி ஆயிற்றே! ஜனங்கள் என்ன புதிய அலங்காரங்களைச் செய்து விடப் போகிறார்கள்?

திணிசுடர் இரவியைத்
திருத்து மாறும், அப்
பணியிடைப் பள்ளியான்
பரந்த மார்பிடை
மணியினை வேகடம்
வகுக்கு மாறும்போல்,
அணிநகர் அணிந்தனர்
அருத்தி மாக்களே.

[ திணிசுடர் இரவி — சுடரைத் திணித்து வைத்திருக்கும் சூரியன். திருத்தும் ஆறு — சீர்திருத்தும் விதம். அப்பணியிடைப் பள்ளியான் — சேஷ சயனத்தில் பள்ளி கொண்டிருக்கும் திருமால். மார்பிடை—மார்பிலுள்ள. மணி—கௌஸ்துப மணி. வேகடம் வகுக்கும் ஆறு—சாணைபிடிக்கும் விதம். அருத்திமாக்கள்—அன்பை மிகுதியாக வுடைய மாந்தர். ]



சூரியனில்தான் எவ்வளவு ஒளியை—எத்தனை சுடர்களை—இயற்கை திணித்து வைத்திருக்கிறது! அத்தகைய சூரியனுக்கு யாராவது புது மெருகு கொடுத்துத் திருத்த எண்ணுவார்களா? மகாவிஷ்ணுவின் மார்பை அலங்கரிக்கிற கௌஸ்துப மணியைத்தான் சாணைபிடித்து மாசு துடைக்கப் பார்க்கிறவர்கள் உண்டா? வீணான, பரிகசிக்கத் தக்க, அதீத முயற்சி! அப்படியே தான் பேராசை தூண்ட, வேண்டாத அலங்காரங்களை யெல்லாம் முடிவில்லாமல் செய்து கொண்டே பொழுது போக்குகிறார்களாம் அயோத்தி வாசிகள், முடி சூட்டு விழாவை முன்னிட்டு.

## வர்ண விசித்திரங்கள்

வரிசை வரிசையாய்க் கட்டிக் கொண்டிருக்கும் கொடிகளில் தான் எத்தனை தினுசு ; என்ன வர்ண விசித்திரம்! வெண்ணிறம், செந்நிறம் முதலான பன்னிறக் கொடிகளுக்கிடையே கரு நிறக் கொடிகளும் பறக்கின்றன! பெண்கள் அணிந்து கொள்ளும் ஆடைகளின் நிறங்களை யெல்லாம் கொடிகளில் ஏற்றி அனுபவித்தார்கள்! - என்று அனுபவிக்கிறார் ஒரு ரஸிகர்.

அந்தப் பறக்கும் கொடிகளைப் பார்த்தால் ராம பட்டாபிஷேகம் காண விரும்பிப் பன்னிறச் சிறகுகளோடு கூடிய பறவைகள் ஒருங்கு வந்து மொய்த்து விட்டன!—என்று சொல்லத் தோன்றுகிறது.

## பனிபொதிந்த பாலசூரியன்

இடை யிடையே செம்மணித் தூண்கள், பவள மயமான கம்பங்கள். அந்தச் செந்நிறக் கம்பங்களுக்கு வெண்பட்டினால் தூய உறைகள் :

புனைதுகில் உறைதொறும்
பொதிந்து தோன்றின,
பனிபொதி கதிரெனப்
பவளத் தூண்களே.

[ புனைதுகில் — அலங்கரிக்கப் பெற்ற வெண்பட்டு. உறைதொறும் — உறைகள் தோறும். பனி பொதி கதிர்—பனி பொதிந்த இளஞ் சூரியன். ]

மெல்லிய வெண் பட்டினால் உறையிடப் பெற்ற பவளத் தூண்கள் பனி பொதிந்த இளஞ்சூரியன் போலப் பிரகாசிக்கின்றனவாம். பழைய இந்தியாவின் சிற்பச் செல்வத்தையும் ஸௌந்தரிய உணர்ச்சியையும் அனுபவித்த ரஸிகப் பண்பு, இயற்கை யழகுகளையும் எப்படி அனுபவித்திருக்கிறது, பாருங்கள்!

# சித்திர ராமாயணம்

பி. ஸ்ரீ.

## 119. வந்தாளே கூனி - சுந்தரி !

அலங்கரிக்கப் பெற்ற ரதங்களும் யானைகளும் அங்கும் இங்கும் போய்க் கொண்டிருக்கின்றன. அந்த ரதங்களையும் அவற்றில் பூட்டியுள்ள குதிரைகளையும் பார்த்தால், தேவலோகத்திலிருந்து விமானங்கள் பூலோகம் காண வந்திறங்கி யிருக்கின்றனவோ !—என்று தோன்றுகிறது. ஜொலிக்கும் நெற்றிப் பட்டங்களுடன் போகும் யானைகளைப் பார்த்தால், உதயகிரி உதய சூரியனை நெற்றியில் தரித்துக்கொண்டு திரிவது போலத் தோன்றுகிறது :

ஆடல்மான் தேர்க்குழாம்,
 அவனி காணிய,
வீடெனும் உலகின்விழ்
 விமானம் போன்றன ;
ஓடைமாக் கடகளி(று)
 உதய மால்வரை
தேடருங் கதிரொடும்
 திரிவ போன்றவே !

[ ஆடல்மான் - குதித்துச் செல்லும் குதிரை. மான்தேர் - குதிரை பூட்டிய ரதம். குழாம் - கூட்டம். அவனி - பூலோகம். காணிய - காணும் பொருட்டு. வீடெனும் உலகு - தேவலோகம். உலகின் - உலகத்தினின்றும். ஓடை - முக படாம் ; யானைக்குக் கட்டுகிற நெற்றிப் பட்டம். மா - பெரிய. கடகளிறு - மதயானைகள். உதயமால்வரை - கிழக்கேயுள்ள பெரிய மலை ; உதயகிரி. தேடரு - தேடுவதற்கு அரிய. கதிர் - சூரியன்.]

### மழையோ மழை !

இக் காட்சிகளை யெல்லாம் இரு பக்கத்து மேல் மாடங்களி லிருந்தும் பார்த்துக் கொண்டிருக்கிறவர்கள் பூமழை பெய்கிறார்கள்,—தேவர்கள் பூமாரி பொழிவது போலே. பனிநீரும் மழையாகப் பெய்கிறது மேல்

மாடங்களிலிருந்து. வாசனைப் பொடிகளையும் வாரித் தூவுகிறார்கள். வெண் முத்துக்களை வாரி வீசுகிறார்கள்: இவை தூய வெண்மழை போல விழு கின்றனவாம்.

எதிர் எதிரான மாடங்களில் இருந்து கொண்டு பெண்கள் இரத் தினம் இழைத்த பொன்னாபரணங்களைக் கழற்றி ஒருவரை நோக்கி ஒருவர் அப்படி அப்படியே வீசி எறிகிறார்களாம். அந்த ஆபரணங்கள் தாவி எதிர் எதிராக வந்து ஒன்றோடு ஒன்று தாக்கித் தகர்ந்து போக, கீழே பொன் மழை பெய்கிறதாம்.

இப்படி எங்கும் மழை, எத்தனையோ தினுசு-மழைகள் !

பூமழை, புனல்மழை,
    புதுமென் சுண்ணத்தின்
தூமழை, தரளத்தின்
    தோமில் வெண்மழை,
தாம்இழை நெரிதலின்
    தகர்ந்த பொன்மழை,
மாமழை நிகர்த்தன
    மாட வீதியே!

[புனல் - (இங்கே) வாசனை நீர். மென்சுண்ணம் - மெல்லிய வாசனைப் பொடி. தூமழை - தூய மழை. தாளம் - முத்து. தோமில்-மாசில்லாத. தாம் - தாவும். இழை - ஆபரணங்கள். நெரிதலின் - நெருங்கித் தாக்குத லால். மா - பெரிய.]

இத்தகைய வர்ணனை, வசனத்தில் ஏதோ வேண் டாத உயர்வுநவிற்சிபோலத் தோன்றும். கம்பன் பாட் டிலோ ஓசையின்பத்துடன் ஒரே சிருஷ்டி-மழையாகப் பொழிந்து, நம்மைக் கவிஞனுடைய மான வீக அயோத்தியின் அந்த ஆனந்த மழைகளுக்கிடையே கொண்டு போய்ச் சொட்டச் சொட்ட நிறுத்தி விடுகிறது.

இத்தகைய கோலாகலங்களைப் பார்த்தால், 'இந்நகரம் பூலோ கத்தின் பகுதி யன்று; வானத் திலுள்ள தேவ ராஜதானியாகிய பொன்னகரத் தைச் சேர்ந்தது தானே!' என்று எண்ணத் தோன் றுகிறது. ராம பட்டாபிஷேக குதூகலம், இப் படி அழகுக்கு



அழகுசெய்து, விண்ணிலுள்ள சொர்க்கத்தை மண்ணிலே வந்து இறங்கச் செய்து விட்டது!

## 'இராவணன் இழைத்த தீமைபோல்'

இவ்வளவு ஆனந்தத்திற்கும் இடையே திடீரென்று தோன்றுகிறாள் ஒருத்தி, திருஷ்டி கழிப்பது போலே!

அந்நகர் அணிவுறும்
அமலை, வானவர்
பொன்னகர் இயல்பெனப்
பொலியும் எல்வையில்,
இன்னல்செய் இராவணன்
இழைத்த தீமைபோல்,
துன்னருங் கொடுமனக்
கூனி தோன்றினாள்.

[அணிவுறும் - அலங்கரிக்கிற. அமலை - ஆரவாரம்; ஆர்ப்பாட்டம். எல்வையில் - சமயத்தில். இன்னல் - துன்பம். துன்னரு - எட்ட முடியாத; அதீதமான.]

கூனியை 'இன்னல் செய் இராவணன் இழைத்த தீமை போல்' என்று குறிப்பிடுவது, இதிகாசத்தின் மத்திய சம்பவத்தை எவ்வளவு நாடகத் திறமையோடு நினைப்பூட்டுகிறது! அயோத்தியை வானளாவ வர்ணித்து விட்டுக் கூனியை இப்படித் தோற்றுவிக்கும் இந்த ரஸிகப் பண்பை என்னென்பது? அயோத்தியின் அதிசௌந்தரியத்திற்குத் திருஷ்டி - பரிகாரம் போல் வரும் கூனி - சுந்தரி, ராவணன் இழைத்த அதீதமான தீமையின் வடிவமாக வருகிறாளாம்.

## மூர்த்தி சிறிது, கீர்த்தியோ?

உருவம் சிறிது; எனினும் கொடுமையை வைத்துத் திணித்திருக்கிறதாம் அந்த உள்ளத்திலே. உருவத்திலும் கூனி; உள்ளத்திலும் கூனி; பேரிலும் புகழிலும் கூனி!

உள்ளமும் கோடிய
கொடியாள்

[கோடிய - கோணியிருக்கிற.]

என்று வர்ணிக்கப்படும் கூனியின் கோணல்-உள்ளம், ராமபட்டாபிஷேகச் செய்தி கேட்டதும், எத்தனையோ தேள் கொட்டியது போல் துடித்துப் போகிறதாம்.

பாவம்! நகர அலங்காரங்களைப் பார்த்ததும் பிரமாதமாய்க் கோபம் வந்து விடுகிறது. அந்தக் கோபத்தை மூட்டி மூட்டி எரிய



விடுகிருள். அது உள்ளத்தை எப்படி வேதனைத் தீயில் வாட்டி வாட்டி யெடுக்கிறது! அந்தத் தீயைக் கண்களும் கக்குகின்றனவாம். இவளுடைய வார்த்தைகளும் அந்தத் தீயிலே பழுக்கக் காய்ந்து தெறிக்கின்றனவாம்:

தோன்றிய கூனியும்
துடிக்கும் நெஞ்சினுள்,
ஊன்றிய வெகுளியாள்,
உளைக்கும் உள்ளத்தாள்,
கான்(று)எரி நயனத்தாள்,
கதிக்கும் சொல்லினுள்,
மூன்றுல கினுக்கும்ஓர்
இடுக்கண் மூட்டுவாள்!

[வெகுளி - கோபம். உளைக்கும் - உளைச்சலை உண்டாக்கும். கான்று - கக்கி. நயனம் - கண். கதிக்கும் - விரைந்து (ஆத்திரமாக) புறப்படும்.]

“என்ன? ராமனுக்கு முடி சூட்டப் போகிருர்களா? அதற்கா இந்தத் தடபுடல்! என்ன வெட்கக்கேடு! அதற்கா இந்த அலங்காரங்களெல்லாம்? இந்த ஆசாமிகளுக்கு வேறு வேலை யில்லையா? என்ன வீணை செலவு!” என்றெல்லாம் இந்தப் பாழான நெஞ்சு நெருப்புப் பொறிகளை வாரி இறைப்பது போல வார்த்தைகள் சிதறிவிழக் கோபத்தை மூட்டிக்கொண்டு வரும் கூனியை, ‘இராவணன் இழைத்த தீமை போல்’ என்றும்,

மூன்றுல கினுக்கும்ஓர்
இடுக்கண் மூட்டுவாள்!

என்றும், பிரமாதமாய்க் கட்டியங் கூறுவதுபோல் அறிமுகப் படுத்துகிருன் கவிஞன். என் கூடாது? இன்னும் சொல்லப் போனுல், மூன்று உலகினுக்கும் இடுக்கண் மூட்டிய ராவணேச்வரனுக்கும் இடுக்கண் மூட்டப் போகிறவள் அல்லவா இக்கூனி-சுந்தரி?

*    *    *    *

கூனியின் ஸங்கல்பம், வசிஷ்ட மகரிஷி முதலானவர்களின் ஸங்கல்பத்தையும் வென்று பட்டாபிஷேகத்தைக் கலைத்து விடுகிறது. இதற்கு ஏதாவது அடிப்படையான—பலமானதொரு—காரணமும் இருக்க வேண்டுமே: அது தேவ ரகஸ்யம் — விதியின் விசித்திர கதி! விதி தன் காரியத்தை முடித்துக் கொள்வதற்குக் கூனியைத் தன் கையில் ஒரு விநோத விளையாட்டுக் கருவியாகக் கொள்வது போலத் தோன்றுகிறது.

மூன்று லோகங்களுக்கும் இடுக்கண் செய்து வரும் ராவணேச்வரனது தீமை முற்றி முறுகி முதிர்ந்து வருகிறது. ‘தன் வினை தன்னைச் சுடும்’ என்ற சட்டப்படி, அத் தீமை தனக்கு உரிய தண்டனையை விளைத்துக் கொள்ளும் காலம் நெருங்கிக் கொண்டிருக்கிறது. அதற்காக ராம பட்டாபிஷேகம் தடுக்கப்பட வேண்டியதுதானே?

இத்தகைய ‘திருப்பணி’யைத் தக்க தருணத்தில் மேற்கொள்ளத் துணிந்த கூனி-சுந்தரியை,

இன்னல்செய் இராவணன்
இழைத்த தீமைபோல்,
துன்னருங் கொடுமனக்
கூனி தோன்றினுள்!

என்று தனது நாடக மேடையில் கம்பன் தோற்றுவிக்கும் திறமையை மிகவும் உயர்ந்த கவிச் சிற்பத் திறமை என்று சொல்ல வேண்டும்.

# சித்திர ராமாயணம்

பி. ஸ்ரீ.

## 120. குடு குடு........வெடு வெடு!

பட்டாபிஷேக வைபவத்தை முன்னிட்டு,

பொன்னகர் இயல்பெனப்
பொலியும்

அயோத்தியிலே, அந்தப் பொன்திரையை விலக்கிக் கொண்டு தோன்றுகிறாள் கூனி, ராவணன் இழைத்த தீமை போலே. நேர்மை அறியாத உள்ளத்திற்கு அறிகுறியான தோற்றத்துடன் இவள் ஏன், எங்கே, இவ்வளவு அவசரமாய்ப் போகிறாள்?

'கூனி - கைகேசி' என்று சேர்த்துப் பேசுகிறார்கள் அல்லவா? கூனி கைகேசியிடம்தான் போகிறாள். உண்மையில், இவர்களுடைய சேர்த்தி அவ்வளவு அழகானதென்றும் தோன்ற வில்லை. உள்ளத்திலும் உடம்பிலும் ஒருங்கே அழகுவாய்ந்த கைகேசிக்கும், இக் கூனிக்கும் என்ன அதிசயமான தொடர்பு பாருங்கள்!

### குடு குடு!

இவர்களுடைய உறவு கேவலம் தாதிக்கும் ராணிக்கும் உள்ள உறவு அன்று. அந்த இளைய ராணி மீது கிழச் சக்ரவர்த்திக்கு எவ்வளவு மோகமோ, அவ்வளவு கடுநட்பு இக் கூனிக்கும் வாய்த்து விட்டது! ஆனால் தசாதர்க்கும் இல்லாத செல்வாக்கு இத் தாதிக்கு அந்த ராணியம்மாளிடம் உண்டு. தன்னுடைய அந்தச் செல்வாக்கில் பூர்ண நம்பிக்கையும் உண்டு.

இச் 'கொடு மனக் கூனி' குடு குடு என்று கைகேசி - அரண்மனைக்குள் திடும்பிரவேசம் செய்வதையே பார்த்து விடுகிறோம்,—கம்பன் கவிதை என்ற ஜாலக் கண்ணாடி வாயிலாக :

தொண்டைவாய்க் கேகயன்
தோகை கோயில்மேல்
மண்டினாள், வெகுளியின்
மடித்த வாயினாள், —

பண்டைநாள் இராகவன்
பாணி வில்உமிழ்
உண்டைஉ.ள் டதனைத்தன்
உள்ளத்(து) உள்ளுவாள்!

[தொண்டைவாய் — சிவந்த கொவ்வைக் கனிபோன்ற வாய். கேகயன் தோகை — கேகயன் மகளான கைகேசி. கோயில் — அரண்மனை. வெகுளியின் — கோபத்தினுல். பாணிவில் — கைவில். உண்டை — உருண்டை. உண்டதனை — பட்டதை. உள்ளுவாள் — நினைத்தாள்.]

கைகேசியின் அரண்மனைக்குள் பிரவேசித்தாள் என்று கூருமல், 'மண்டினுள்' என்று கூறுவது கவனிக்கத் தக்கது. புகை மண்டி இருள் சூழ்ந்து கண்ணை மறைப்பது போல் இவள் கைகேசியின் அறிவுக் கண்ணைப் புகைத்துவிடக் குடு குடுவென்று போகிருள்!—என்பது குறிப்பு.

'வெகுளியின் மடித்த வாயினுள்' என்பதில், உதடுகளை மடக்கிக் கடித்துக் கொண்டு போகும் கோபம் சித்திரிக்கப் படுகிறது. எதிராளி மேலுள்ள கோபந்தான் இவள் உதடுகளை இந்தப் பாடு படுத்துகிறது!

விளையாட்டே வினையாச்சு!

இந்த நிலையில், தன் ஆங்காரத்திற்குத் தூபம்போடுவதுபோல், ராமன் மேலுள்ள கோபத்திற்கும் ஒரு காரணத்தைக் கற்பித்துக் கொள்கிருள். ராமன் சிறு பையனுக இருந்தபோது கையில் சிறு வில்லும், களிமண் உண்டையும் கொண்டு விளையாடுவதுண்டு. ஒரு நாள் குழந்தை-ராமன் இந்தக் கூனியம்மாளையும், இவளுடைய முதுகுக் கூனையும் பார்த்து விட்டான். உடனே 'இதுவும் ஒரு வேடிக்கை தான்' என்று இவளுடைய கூனை இலக்காகக் கொண்டு அந்தச் சிறு களிமண் உண்டையைத் தன் கை வில்லில் வைத்து விளையாட்டாக எய்துவிட்டான். எய்து, 'சபாஷ்! குறி தவறவில்லை' என்று சந்தோஷித்தான். அந்தக் கைவில் 'உமிழ்'ந்த (அதாவது லேசாகத் தள்ளிய) அந்த உண்டை தன் கூன்மேல் பட்டதைக் கூனியின் கோணல்-உள்ளம் மறக்கவேயில்லை. விளையாட்டுப் பிள்ளை செய்த இந்த விளையாட்டுத் தொழிலே வியாஜமாக ஆங்காரத்தை மூட்டிக்கொண்டு, இவள் ராம பட்டாபிஷேகத்தை எப்படியாவது தடுத்துவிட வேண்டுமென்று கைகேசியின் அரண்மனைக்குள்ளே பிரவேசிக்கிருள்.

அந்தக் கோணல் - உள்ளத்திலே எப்படி விழுந்திருக்கிறது கோப - வித்து!

உள்ளத்(து) உள்ளுவாள்!

என்ற சொற்கள், தன் கோபத்திற்குக் கூனி கண்டு பிடித்த காரணம் இவள் உள்ளத்தில் எப்படி அழுந்திக் கிடக்கிறது என்பதைத் தொனிப் பொருளாக வெளியிடுகின்றன. அக்கிரமம் செய்கிறவர்கள் இப்படிக் காரணம் கண்டுபிடித்து உள்ளத்திலே அக் காரணத்தை விதைத்து வேரூன்றச் செய்து கொள்வது பிரசித்தம். இத்தகைய கோபத்தைத் துணையாகக் கொண்டு தான், விரைவில் நடக்க இயலாத கூனியும் விரைந்து வந்து மண்டிவிட்டாள்!

என்ன அழகு! என்ன நாகரிகம்!

கைகேசி இன்னும் விழித்தெழுந்து வரவில்லை. அதற்காகக் காத்திருந்தாளா கூனி? குடு குடுவென்று படுக்கை யறைக்குள்ளேயே போய் விட்டாள்:

நாற்கடல் - படுமணி
நளினம் பூத்ததோர்
பாற்கடல் - படுதிரைப்
பவள வல்லியே
போல்,கடைக் கண் அளி
பொழியப், பொங்கணை
மேல்கிடந் தாள்தனை
விரைவின் எய்தினுள்.

[ நால் கடல் படு மணி - நாலு கடல்களிலும் உண்டாகிய இரத்தினங்களோடு. நளினம் - தாமரை. திரை - அலை. பவளவல்லி - பவளக்கொடி. அளி - கருணை. பொங்கணை - பொங்கி விளங்கும் மெத்தை. ]

அழகும் இளமையும் கொழிக்கக் கைகேசி, வெண்பட்டு விரித்த மெத்தையில் சுகமாகச் சயனித்துக் கண் அயர்ந்திருப்பது அப்படியே கண் முன் வருகிறது.

பொங்கும் பாற்கடல் சின்னஞ் சிறு அலைகளோடு விளங்குவது போலக் காண்கிறது அந்த வெண்ணிறப் பட்டு விரித்த மெத்தை. அதிலே பவளக் கொடி ஒன்று படர்ந்து கிடப்பது போலக் கிடக்கிறாள் கைகேசி. அந்தப் பவளக்கொடியை ஒட்டித் தாமரைப் பூக்கள் மலர்ந்திருப்பதுபோல, முகம் கைகால்கள் தோற்றம் அளிக்கின்றன. அந்தத் தாமரைப் பூக்களை ஒட்டி நாலா பக்கத்துக் கடல்களிலுமுள்ள நவரத்தினங்களைச் சிற்றலைகள் கொண்டு கொழிப்பது போல், ஒரே ரத்நாகரமாய்க் காட்சியளிக்கின்றன ஆபரண சோபையும் அவயவ சோபையும்!



அப்பொழுது அவளது கடைக்கண் மாத்திரம் திறந்திருப்பது போலவும், கருணை பொழிந்து கொண்டிருப்பதாகவும் கவிஞன் காட்டுகிறான். சுத்தமான, கறந்த பால்போன்ற உள்ளத்திலே அன்பும் அமைதியும் வாய்ந்தவள் கைகேசி என்பது குறிப்பு. அவள் தூய வெண்ணிறப் பட்டு மெத்தையில் படுத்திருப்பதும், அவளது தூய நாகரிக உள்ளத்திற்கு ஓர் அறிகுறி என்று கருதலாம்.

இத்தகைய அழகியான கைகேசிக்கும், ஒரே எரிச்சலாய்ப் புகைந்து கொண்டு சரேலென்று இந்தப் படுக்கையறைக்குள் பாய்ந்து வந்த கூனிக்கும் என்ன முரண்பாடு, பாருங்கள்! எனினும் என்ன பாசம்!

கூனி அங்கே வந்து நின்றது கைகேசிக்குத் தெரியாது. பஞ்சணை மேல் தூங்கிக்கொண்டுதான் இருக்கிறாள். கூனி அவள் எழுந்திருக்கும் வரையிலும் காத்திருக்க வில்லை. உடனே எழுப்பப் பார்க்கிறாள். அவ்வளவு நெருங்கிய பழக்கம் இந்தத் தாதிக்கு எஜமானியம்மாளிடம்.

கூனி எப்படி எழுப்புகிறாள்? தன் ஆத்திரத்திற்கு இசைய அவசரமாகத்தான் எழுப்புகிறாள்; ஆனால் சத்தம் போட்டோ, நாகரிகமற்ற வேறு முறையிலோ எழுப்பி விடவில்லை. மெல்லக் கால்களைத் தடவிக் கொடுக்கிறாள். இந்தக் காட்சியைத் தான் கவிஞன் எப்படி அனுபவிக்கிறான், பாருங்கள்:

எய்தி, அக் கேகயன்
  மடந்தை - ஏடவிழ்
நொய்தலர் தாமரை
  நோற்ற நோன்பினால்
செய்தபே ருவமைசால் -
  செம்பொன் - சீறடி,
கைகளில் தீண்டினாள்,
  காலக் கோள்அ(ன்)னாள்.

[ எய்தி - அடைந்து. எடு அவிழ் நொய்து அலர் - இதழ்கள் நெகிழ்ந்து மிருதுவாக மலர்கிற. நோன்பு - தவம். பேருவமை - பெரிய உவமைத் தன்மை. சால் - பொருந்திய. செம்பொற் சீறடி - செம்பொன் போல் அவ்வளவு அழகான, அருமையான சிறு அடிகள். காலக்கோள் அனாள் - உத்பாத காலத்தைக் குறிக்கத் தோன்றும் ஒரு கெட்ட கிரகம் போன்றவள். ]

'கைகேசியின் மிருதுவான மலரடிகளுக்கு உவமையாகச் சொல்வதற்குக் தாமரை மலர் தான் என்ன தவம் செய்ததோ?' என்ற கவிதானுபவத்தைப் பாருங்கள்.

இத்தகைய மலரடிகளைக் கூனி மெள்ளத் தீண்டித் தடவியதும் கைகேசி விழித்துக் கொள்ளப் போகிறாள். பாம்பு தீண்டியது போல் கூனி தீண்டி, துயிலுணர்ந்த கைகேசி மீது விஷத்தைக் கொட்டுவது போல வார்த்தைகளைக் கொட்டப் போகிறாள்.

* * * *

(குடு குடு என்று வந்த கூனி வெடு வெடு என்று பேசப் போகும் போக்கையும், கூனி — கைகேசிகளின் சம்பாஷணையையும் அடுத்த வாரம் பார்க்கலாம்.